பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாதி 27 வெள்ளிக்கிழமை 13.10.2017 கதிர் 341


வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நாடுங்கள்
சன்சிகா நகைமாடம்
இல.114, பஸார் வீதி, வவுனியா.
தொலைபேசி: 024 222 4028

# அநுராதபுரத்துக்கு வழக்கை மாற்றும் சதி நோக்கம் முதல்வரால் அம்பலம்!

## தம்மிடம் கைதிகளாக இருந்த படையினரைப் புலிகளும் கொன்றார்கள் எனத் தீர்ப்பு மூலம் காட்டும் முயற்சியாம்



யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 13

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழான ஒரேயொரு வழக்கை மட்டும் சாட்சிகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற பெயரில் வவுனியா மேல் நீதிமன்றத்தில் இருந்து அநுராதபுரம் மேல் நீதிமன்றுக்கு மாற்றும் சூழ்ச்சித் திட்டத்தின் பின்புலத்தில் புதைந்து கிடக்கும் உள்நோக்கத்தைப் பகிரங்கமாகப் போட்டுடைத்திருக்கின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

தாம் பிடித்துக் கைதிகளாக வைத்திருந்த படையினரை யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் விடுதலைப் புலிகளும் கூடக் கொன்றார்கள்தான் என்பதை நீதிமன்றத் தீர்ப்பு ஒன்றின் மூலம் நிரூபித்துக் காட்டவும் –

யுத்தத்தின் இறுதியில் சரணடைந்த புலிகளைப் படையினர் கொன்றனர் என்ற குற்றச்சாட்டையும், அதனால் எழுந்துள்ள சர்வதேச அழுத்தத்தையும் இதன் மூலம் நீர்த்துப்போக வைக்கவும் –

ஓர் எத்தனமாகவே இந்த சதி முயற்சி திட்டம் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது என்கிறார் முதலமைச்சர் விக்னேஸ்வரன்.

பக்கம் 18 »

## இன்று கடையடைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.13

தமிழ் அரசியல் கைதிகளின் நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவு தரும் வகையில் இன்று வடமாகாண ரீதியாக இடம் பெறும் கடையடைப்பு முழு அளவில் வெற்றிபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பக்கம் 18 »

## ஜனாதிபதியின் யாழ்.வருகை சிறிதரன் எம்.பி. புறக்கணிப்பு



கிளிநொச்சி, ஒக்.13

“அநுராதபுரம் சிறையில் சாகும் வரை உண்ணாவிரத மிருக்கும் அரசியல் கைதிகளின் நியாயமான கோரிக்கைகளுக்கு நீதியானதொரு தீர்வை வழங்காத நிலையில் எமது மண்ணுக்கு நீங்கள் வருகின்றமை பொருத்தமற்றது. எனவே அவர்களுக்கு நீதி

பக்கம் 18 »

## நாளை சம்பந்தன் வரார்

யாழ்ப்பாணம், ஒக்.13

நாளை யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனபங்குபற்றும் எந்த நிகழ்விலும் எதிர்க்கட்சித்தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன்பங்குபற்றமாட்டார்.

இந்தத்தகவலைகடந்த வாரஇறுதியிலேயே'காலைக் கதிர்' நாளிதழுக்கு அவர் தெரிவித்திருந்தார்.

பக்கம் 18 »

## சுமந்திரன் புதுடில்லிக்கு



கொழும்பு, ஒக்.13

இலங்கை – இந்திய மீனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் நாளை புதுடில்லியில் நடைபெறும் அமைச்சர்கள் மட்டப் பேச்சுகளில் கலந்துகொள்வதற்காக இலங்கைக்கடற்றொழில் அமைச்சர் மஹிந்த

பக்கம் 18 »

## கைதிகளின் கோரிக்கைக்குத் தீர்வு இன்றேல்

# மைத்திரி, சம்பந்தன் வருகையை புறக்கணிப்பதற்குத் தீர்மானம்

## கடையடைப்பு ஏற்பாட்டுக் குழுவினர் நேற்றிரவு கூடி ஆராய்ந்து அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.13

“அரசியல்கைதிகளின் கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வு வழங்காமல், அதைப்புறக்கணித்துவிட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனும் நாளை (சனிக்கிழமை) யாழ்ப்பாணத்தில் இடம்பெறும்நிகழ்வுகளில் கலந்துகொள்வார்களாயின் அந்தநிகழ்வுகளைப் புறக்கணிக்குமாறு, வடக்கு மாகாண முதலமைச்சர், மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறோம்.”

–இவ்வாறு இன்றைய கடையடைப்புக்குஅழைப்பு விடுத்துள்ள-பொதுஅமைப்பு

பக்கம் 18 »

# கிளர்ச்சி செய்த ஜே.வி.பியினருக்கு மன்னிப்பு: தமிழ்க் கைதிகளுக்கு மட்டும் அது ஏன் இல்லை?

## தமக்கு விளங்கவில்லை என ஜனாதிபதி சம்பந்தன் காட்டமாகக் கடிதம்



கொழும்பு, ஒக்.13

“கிளச்சி செய்த ஜே.வி.பியினர் எல்லோருக்கும் மன்னிப்பு வழக்கப்பட்டு அவர்கள் விடுவிக்கப்பட்டனர். அதை ஏன் தற்போது தமிழ்க் கைதிகள் விடயத்தில் செயற்படுத்த முடியாமல் இருக்கின்றது என்பதை என்னால்விளங்கிக் கொள்ள முடியாமல் இருக்கின்றது.”

– இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தாம் நேற்று அனுப்பிய காட்டமான கடிதம் ஒன்றில் தெரிவித்திருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன்.

நீண்ட காலம் சிறையில் இருக்கும் அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பாக ஜனாதிபதிக்கு அவர் நேற்று அனுப்பிய கடிதத்தின் முழு விவரம் வருமாறு:–

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள, நீண்டகாலமாகத் தமது விடுவிப்பைக் கோரி வரும் கைதிகள் சார்பாக இந்தக் கடிதத்தைத் தங்களுக்கு எழுதுகின்றேன்.

பின்வரும்விடயங்களைத்தெரிவிக்கவிரும்புகின்றேன்:–



பக்கம் 18 »

காலைக்கதிர் Kalaikkathir


# ஐ.நாவின் விசேட பிரதிநிதிகள் முள்ளிவாய்க்காலுக்கு விஜயம்!





முல்லைத்தீவு, ஒக். 13

ஐக்கிய நாடுகள் சபையின் இடைநிலை நீதி தொடர்பான விசேட பிரதிநிதி பப்லோ டி கிரீஃப் தலைமையிலான ஐக்கிய நாடுகள் சபைக் குழுவினர் நேற்றுக் காலை இறுதிப்போர் இடம்பெற்ற முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதிக்குவிஜயம்மேற்கொண்டிருந்தனர்.

யுத்தத்தின் போது ஏற்பட்ட அசம்பாவிதங்கள், ஏற்றுமதி நடவடிக்கைகள் மற்றும் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்களை ஆராய்வதற்காகவே ஐக்கிய நாடுகள் சபையின் இடைநிலை நீதி தொடர்பான விசேட பிரதிநிதி பப்லோ டி கிரீஃப் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

இதன் பிரகாரம் நேற்று முன்தினம் திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்தக் ஐ.நா. குழுவினர் நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தின் போரால் பாதிக்கப்பட்ட பல பகுதிகளுக்கு விஜயம் மேற்கொள்ளும்பொருட்டு வருகை தந்திருந்தனர்.

இதன்படி முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியில் போரில் உயிரிழந்தவர்கள் நினைவாக நினைவு கற்கள் அமைக்கப்பட்டுள்ள சின்னப்பர் தேவாலயத்தில் உள்ள போரில் படுகொலையானவர்களின் நினைவுத் தூபியை பார்வையிட்ட தோடு போரின் எச்சங்களாகமிஞ்சியுள்ளஅடையாளங்களையும் பார்வையிட்டார்.



இதன்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சிலரும் முறைப்பாடுகளை இந்தக் குழுவினரிடம் முன்வைத்திருந்தனர்.

கடந்த மே 18 அன்று அந்த சின்னப்பர் தேவாலயத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் நினைவு கற்கள் அமைக்கப்பட்டு நடைபெறவிருந்த நிகழ்வு, நீதிமன்ற உத்தரவுக்கமைய தடைவிதிக்கப்பட்டதோடு அதற்கான ஒழுங்குகளை மேற்கொண்ட அருட்தந்தை எழில்ராஜன் விசாரணைக்காக பொலிஸாரால் அழைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(மற்றுமொரு செய்தி 06 ஆம் பக்கத்தில்)

## பாடசாலை தொடர்பாக முகநூலில் அவதூறு

### ஆசிரியர் ஒரு மணி நேரம் பணிப் பகிஷ்கரிப்பு

வவுனியா, ஒக். 13

வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயம் தொடர்பாக முகநூலில் அவதூறு பரப்பப்பட்டது எனத் தெரிவித்து அந்தப் பாடசாலையின் ஆசிரியர்கள் நேற்று ஒரு மணி நேரம் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியர்கள் தொடர்பாகவும் பாடசாலை தொடர்பாகவும் முகநூல் ஒன்றில் அவதூறு பரப்பப்பட்டிருந்தது.

இதனால் சினமடைந்த பாடசாலையின் ஆசிரியர்கள், காலை பாடசாலைக்குச் சமுகமளித்த போதிலும் வகுப்பறைகளுக்குச் செல்லாமல் பாடசாலை முன்றிலில் குழுமி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து பாடசாலை அதிபர் அந்த முகநூல் தொடர்பாக நெளுக்குளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியமையை அடுத்து பாடசாலைக்குப் பொலிஸார் வருகை தந்தனர். அத்துடன், பாடசாலை நலன்விரும்பிகள், பெற்றோர், இணைந்து ஆசிரியர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இந்தநிலையில் அந்தப் பாடசாலைக்கு வருகைதந்த வலயக் கல்விப் பணிப்பாளர் மு.ராதாகிருஷ்ணனும் ஆசிரியர்களுடன் கலந்துரையாடினார். அத்துடன், அண்மைக் காலமாக வவுனியா பாடசாலைகள் தொடர்பாக முகநூல்களில் அவதூறு பரப்பப்பட்டு வருகின்றது எனவும் இது தொடர்பாக தீர்க்கமான முடிவெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். பிரதி பொலிஸ் மா அதிபருடன் தான் கலந்துரையாடுவேன் எனவும் தெரிவித்துள்ளார்.(க-100)

## தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தை அரசு இனவாத அடிப்படையில் அணுகுகிறது!

கொழும்பு, ஒக். 13

தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தை மைத்திரி - ரணில் தலைமையிலான தேசிய அரசு இனவாத அடிப் படையிலேயே அனுகி வருகிறது என அரசியல் கைதிகளை விடுவித்துக்கொள்வதற்கான தேசிய அமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.

இதனால், நீண்டகாலமாக சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளும் அவர்களது குடும்பத்தினரும் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நாளைய தினம் கொழும்பு - புறக்கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நடத்தவுள்ள கண்டனப் போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அனைத்துத் தரப்பினருக்கும் அழைப்பு விடுத்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அரசியல் கைதிகளை விடுவித்துக் கொள்வதற்கான தேசிய அமைப்பு இந்தத் தகவல்களைத் தெரிவித்திருக்கின்றது.

இலங்கையில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு எட்டு வருடங்கள் கடந்துள்ளன. இருந்தபோதிலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட 130 தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படாமை. அவர்கள் தொடர்ந்தும் சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் என அரசியல் கைதிகளை விடுவித்துக்கொள் வதற்கான தேசிய அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை மாரிமுத்து சத்திவேல் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யுத்தம் முடிவடைந்ததை அடுத்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பெரும்பாலான தளபதிகள் விடுவிக்கப்பட்டு அவர்கள் வெளிப்படையாக அரசியலிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு உதவினர் அல்லது அந்த இயக்கத்தில் அங்கம் வகித்தனர் என்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்காது, அவர்கள் தொடர்ந்தும் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றமை ஏற்றுக்கொள்ள முடியாததே.

அதேவேளை, அநுராதபுரம் சிறைச்சாலையில் இன்றுடன் 18 ஆவது நாளாகத் தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதமிழ் அரசியல் கைதிகளின் உடல் நிலை மேலும் மோசமடைந்துள்ளது.

### அவர்களை விடுவிப்பதற்கான தேசிய அமைப்பு குற்றச்சாட்டு

இந்த மூவர் உட்பட இலங்கைச் சிறைச்சாலைகளில் 130 தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்தும் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதனால் இவர்களை விடுதலை செய்வதற்கு அரசியல் ரீதியான தீர்மானம் ஒன்றை எடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம்.

இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி மேற்கொள்ளப்படும்தொடர்போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாகவும் அந்தப் போராட்டங்களுக்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையிலும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் நான்கு மணிக்கு கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாகப் போராட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளோம் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

# கடையடைப்பை ஆதரிக்கக் கோருகிறது அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை

தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவான கடையடைப்பிற்கு தாயக மக்கள் முழுமையான ஆதரவை வழங்கி வெற்றிபெறச் செய்ய வேண்டும் என அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை கேட்டுள்ளது.

இதுதொடர்பில் அந்த அமைப்பு விடுத்த அறிக்கையில் –

நீதிக்குப் புறம்பான வகையில் நீடிமிட்டு, வழக்கு விசாரணைகளை இழுத்தடித்து, பல ஆண்டுகளாக சிறையிலடைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டத்திற்கு ஆதரவாக பொது அமைப்புகள் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கும் வட மாகாணம் தழுவிய பூரண கதவடைப்பு போராட்டத்திற்கு எமது தார்மீக ஆதரவையும் தெரிவிக்கிறோம். அத்துடன் தாயக மக்கள் அனைவரும் இக் கடையடைப்பு போராட்டத்திற்கு ஆதரவை வழங்கி அதனை வெற்றி பெறச் செய்யுமாறு உரிமையோடு கேட்டுக்கொள்கின்றோம்.

தமது வழக்குகளை மீண்டும் தமிழ்ப்பிரதேச நீதிமன்றங்களுக்கு மாற்ற வேண்டும் என்ற உடனடிக் கோரிக்கையையும், அவ்வாறு மாற்றப்பட்டதன் பின்பு தமது வழக்குகளைத் துரிதமாக விசாரித்து முடிவுகாண வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்து அநுராதபுரம் சிறையில் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மூவரின் கோரிக்கைகளை இழுத்தடிப்பின்றி உடனடியாக நிறைவேற்ற வலியுறுத்தியும் –

அனைத்துத் தமிழ் அரசியல் கைதிகளையும் ஓர் அரசியற் தீர்மானத்தின் ஊடாக விடுவிக்குமாறு சிறிலங்கா அரசாங்கத்தை வலியுறுத்தியும் –

தமிழ் அரசியல் தலைமைகள் அசமந்தப்போக்கினைக் கைவிட்டு இவர்களின் விடுதலைக்கு சிறிலங்கா அரசிற்கு நேரடி அழுத்தங்களை கொடுக்க வேண்டுமென வலியுறுத்தியும் – பொது அமைப்புகளால் இக் கடையடைப்பு போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அரசியல் காரணங்களை முன்னிறுத்தி தமிழர் தரப்பின் கோரிக்கைகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் தட்டிக்கழிக்காது உடனடி நடவடிக்கையின் மூலம் இப்பிரச்சினைக்கு உரிய தீர்வைக் காண முன்வரவேண்டுமென உலகத் தமிழர்களின் சார்பில் அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அச்சுறுத்தி பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் நீதிக்குப் புறம்பாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 132 தமிழ் அரசியல் கைதிகளை சிறையிலடைத்துத் துன்புறுத்தி வரும் சிறிலங்கா அரசானது தனக்கு உகந்தவர்களாகச் செயல்பட்டுவரும் கருணா மற்றும் கே.பி. போன்றவர்களை சகல வசதி வாய்ப்புகளுடனும் சுதந்திரமாக செயற்பட அனுமதித்துள்ளது. இதன் மூலம் அதன் இரட்டை முகம் அம்பலமாகிறது.

மற்றும் 2009ஆம் ஆண்டு சரணடைந்த 18000ற்கு மேலான தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள், மக்கள், செயற்பாட்டாளர்கள் நிலைவரம் என்ன என்பது இன்று வரையும் ஒரு புரியாத புதிராகவே உள்ளது. இவர்களைப் பற்றிப் பேசாமல் மறக்கடிக்கப்படுவதற்கான முயற்சிகள் தொடர்ச்சியாக சிறிலங்கா அரசால் முடுக்கி விடப்பட்டுள்ளன.

சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளைத் திருப்திப்படுத்துவதற்காக தமிழர்கள் தொடர்ந்தும் வதைக்கப்பட்டு வருகின்றமையை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. ஒரே கொள்கையில் ஒன்றுபட்ட மக்களாக உறுதியோடு இருந்து தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக முன்னெடுக்கப்படும் இக் கடையடைப்பு போராட்டத்திற்கு முழுமையான ஆதரவை வழங்கி வலுச்சேர்க்குமாறு தாயக மக்களை உரிமையோடு கேட்டுக் கொள்கின்றோம். – என்று உள்ளது. (உ)

## வடக்கு - கிழக்கு மாகாணத் தெருக்களை இணைக்க இந்தியா உதவ உள்ளது

இலங்கையின் வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் பல நூறு கிலோ மீற்றர் நீளமான அகண்ட புதிய நெடுந்தெரு ஒன்றை அமைப்பதற்கு உதவ இந்திய அரசு முன்வந்துள்ளது.

அந்த நெடுந்தெரு திருகோணமலையும், யாழ்ப்பாணத்தையும் கடலோரப்பாதையால் தொடுக்கும் வகையில் அமையும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து தகவல் வெளியிட்ட, பெருந்தெருக்கள் மற்றும் உயர் கல்வித்துறை அமைச்சர் லஷ்மன் கிரியெல்ல–

பெருந்தெருக்கள் அபிவிருத்தி அமைச்சு இதற்கான ஏற்பாடுகளையும் வேலைத் திட்டங்களையும் ஆரம்பித்து விட்டதாகத் தகவல் தெரிவித்தார்.

அவை குறித்து இந்திய தரப்புக்கு தெளிவுபடுத்தியதாகவும், அமைச்சர் கூறினார்.

எனினும் அவர்கள் இங்கு வந்து நேரடியாக செயற்படுவார்கள் என்றும் அவர் சொன்னார்.

மேலும், இந்தியத் தரப்பினர் இங்கு வந்து நிலைமைகளைக் கண்டறிந்து பணியை விரைவில் ஆரம்பிக்க உள்ளனர் என்றும் அமைச்சர் தகவல் தெரிவித்தார்.

## கொழும்பிலும் கவனவீர்ப்பு

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவாகவும், அனைத்து அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் கொழும்பிலும் இன்று கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இந்தப் போராட்டம் இடம்பெறும் என்று அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

## விடுதலை வேண்டி பூசை, வழிபாடு

அரசியல் கைதிகள் விடுதலையை வலியுறுத்தி இன்று நண்பகல் 1.30 மணிக்கு வவுனியா குட்செட் வீதி கருமாரி அம்மன் ஆலயத்தில் வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம், தமிழ் விருட்சம், கருமாரி அம்மன் ஆலய பரிபாலன சபை ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ள விசேட பூசை வழிபாடுகள் இடம் பெறவுள்ளன.

நீண்ட காலமாக சிறைகளில் வாடும் கைதிகளின் விடுதலை வேண்டியும், அவர்களின் நல்வாழ்வுக்காகவும், அனைத்து உயிர்களின் சேமத்திற்காகவும் இடம்பெறவுள்ள இறை பிரார்த்தனையில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டு குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## அரசு சார்பற்ற நிறுவனங்களின் இணையமும் முழு ஆதரவு

இன்று நடைபெறும் கடையடைப்புக்கு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையமும் அதில் அங்கத்துவம் பெறும் 28 நிறுவனங்களும் ஆதரவு தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் இணையமும் அதன் அங்கத்துவ நிறுவனங்களும் ‘அரசியல் கைதிகளின் கோரிக்கைகள் நியாயமானவை, விடுதலையைத் துரிதப்படுத்த வேண்டும்’ – என்ற தலைப்பில் நேற்று விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அரசியல் கைதிகளின் கோரிக்கைகள் நியாயமானவை. அவை உடனடியாக நிறைவேற்றப்படுவதோடு அவர்களின் விரைவான விடுதலைக்கு நடவடிக்கை எடுக்கப்படவும் வேண்டுமென இணையம் வேண்டுகோள் விடுக்கிறது.

அத்துடன் இதுவிடயமாக இன்று நடைபெறவுள்ள கடையடைப்பிற்கு இணையமும் இணையத்தின் 28 அங்கத்துவ நிறுவனங்களும் முழு ஆதரவு தெரிவிக்கின்றமையோடு ஏனைய சிவில் அமைப்புக்களையும், வெகுஜன அமைப்புக்களையும் அதற்கு ஆதரவு வழங்கும் வண்ணம் தயவுடன் கேட்டுக்கொள்கிறோம். – என்று உள்ளது. (உ)

## ஈ.பி.டி.பி கட்சி மீதான மக்களின் நம்பிக்கையைத் தக்க வைப்போம்

### கட்சி உறுப்பினர்கள் மத்தியில் டக்ளஸ் உரை

யாழ்ப்பாணம், ஒக்.13

சமூக அபிவிருத்தியுடன் கூடியதான கட்டமைப்புக்களை நிறுவி அவற்றினூடாக சமூகத்தை வளர்ச்சிகாணச் செய்வதே தமது கட்சியின் நிலைப்பாடாகும் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யுத்தம் முடிவடைந்து மக்கள் இயல்பு வாழ்வுக்குத் திரும்பிவரும் நிலையிலும் தீர்க்கப்படாத பிரச்சினைகள் இன்றும் காணப்படுகின்றன. அவை அடிப்படைத் தேவைகள் உள்ளிட்ட ஏனைய பிரச்சினைகளாகவும் காணப்படுகின்றன.

அந்தவகையில் இனங்காணப்படும் எமது மக்களின் பிரச்சினைகளுக்கும் தேவைப்பாடுகளுக்கும் வேறுபாடுகளுக்கு அப்பால் தீர்வுகள் காணப்படவேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும்.

கிராமங்கள்தோறும் வட்டார ரீதியாக நிர்வாகக் கட்டமைப்புக்களை உருவாக்கி மக்களின் பிரச்சினைகளை இனங்கண்டுகொள்வது மட்டுமன்றி அவற்றுக்கான தீர்வு களையும் பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

எமது கட்சி மீது மக்களுக்கு இருக்கின்ற நம்பிக்கையை நாம் நிச்சயம் பாதுகாப்போம். கடந்த காலங்களில் எமது கட்சி மீதான காழ்ப்புணர்ச்சி காரணமாக சுயலாப அரசியல்வாதிகள் அவதூறுகளையும் சேறுபூசல்களையும் தொடர்ச்சியாக முன்வைத்து வந்தனர்.

ஆனால் நீதிமன்ற விசாரணைகளுக்கூடாக அவற்றின் உண்மைகள் தற்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன என்பதையும் இந்த வேளையில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை மக்களுக்கு பயனுள்ள வகையில் கட்சியை நிலைநிறுத்தி அதனூடாக மக்களுக்கான சேவைகளையாற்றுவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து உழைக்கவேண்டும். – எனவும் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தினார்.

கட்சியின் வடமாகாண நிர்வாகச் செயலாளர்கள் மற்றும் யாழ்.மாவட்ட பொதுச்சபை உறுப்பினர்களுடனான விடே சந்திப்பின்பொன்று நேற்று ஈ.பி.டி.பியின் யாழ்ப்பாணம் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. அதில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## கிளர்ச்சி...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்னமும் நிறைவேற்றவில்லை. ஆனாலும், இதன்மூலம் குறித்த சட்டம், சட்டப் புத்தகங்களில் தொடர்ந்திருக்க மாட்டாதென்ற இலங்கை அரசின் உறுதியளிக்கப்பட்டகப்பாட்டிலிருந்து இலங்கை தவற முடியாது.

(iv) இந்த நபர்களில் அனேகமானவர்களுக்கு எதிராக இருக்கும் ஒரேயொரு சான்று அவர்களின் விருப்பத்துக்கு மாறாகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மட்டுமே என்பதோடு, அது சாதாரணமான நீதிமன்றத்தில் அவர்களுக்கு எதிரான சாட்சியமாக ஏற்கப்பட மாட்டாது. இதனால் வழக்குத் தொடுநர்களிடம் போதிய சாட்சியங்கள் இல்லாமை காரணமாக அனேக வழக்குகள் ஒத்திவைக்கப்பட்டு வருகின்றன.

(v) அனேகமாக இவர்கள் எல்லோருமே அவர்கள் கைது செய்யப்பட்டவுடன் குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால் சிறைவாசம் அனுபவிக்க வேண்டிய காலத்தைப் போன்ற நீண்ட காலத்திற்குத் தடுப்புக்காவல் கைதிகளாகவே இருக்கின்றனர்.

(vi) தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள இவர்களின் குடும்பங்கள் அவர்களின் உழைப்பாளிகளின் ஆதரவு இல்லாமல், நீண்டகாலமாக வேதனையில் வாடுகின்றன. மிகவும் காத்திரமான இம் முக்கிய விடயத்திற்கு இதுவரை கவனம் செலுத்தப்படவில்லை.

(vii) பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் தீய அம்சங்களுக்கும் புறம்பாக, மக்கள் விடுதலை முன்னணியினர் (ஜே.வி.பி) கிளர்ச்சிகளை மேற்கொண்ட வேளையில் கைது செய்யப்பட்டவர்கள் யாவரும் மன்னிப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். இதே போன்ற ஒரு கொள்கையை தற்போதுள்ள இந்தக் கைதிகள் விடயத்திலும் செயற்படுத்த முடியாமலிருப்பது ஏன் என்பதை விளங்கிக் கொள்ள முடியாதுள்ளது.

(viii) இந்த வழக்குகள் முழுமையாகச் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பொறுப்பில் உள்ளவையென்பதாகக் கருத முடியாது. அரசின் முதன்மைச் சட்ட ஆலோசகர் என்ற வகையில் சட்டமா அதிபருக்குரிய கௌரவத்தை வழங்கும் அதேவேளை, இவ்வழக்குகள் அரசியல் அடையாளங்களையும் கொண்டிருப்பதனால் இவை முழுமையாகச் சட்டம் சம்பந்தப்பட்டவையென்று கருதிவிட முடியாது. இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு உரிய நேரத்தில் தீர்வு காணப்பட்டிருந்தால், கைதிகளாக உள்ளவர்களில் அனேகமானவர்களுக்கு தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை ஏற்பட்டிருக்க மாட்டாதென்பதும் அவர்கள் பயனுள்ள பிரஜைகளாக இருந்திருப்பார்கள் என்று கூறுவதில் நியாயமிருப்பதைத் தெரிவிக்க முடியும்.

இத்தகைய சூழ்நிலையில், தாங்கள் இந்த விடயத்தை அரசியல் ரீதியாகவும் நோக்க வேண்டிய கடப்பாட்டை உருவாக்கியுள்ளது. இந்த விடயம் அரசியல் ரீதியாகக் கையாளப்படாமலிருப்பது இன இணக்கத்தை ஏற்படுத்துவதிலும், நன் மதிப்பையும் அமைதி நிலைமையையும் மீள ஏற்படுத்துவதிலும் வலுவான தடையாகவே அமையும்.

(ix) சில வழக்குகள் வவுனியாவில் இருந்து அனுராதபுரத்திற்கு இடமாற்றப்பட்டதன் மூலம் சில தேவையற்ற முரண்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சாட்சிகளுக்குப் பாதுகாப்பு அவசியமாயின் வழக்குகளை இடமாற்றம் செய்யாமல், சாட்சிகளுக்கான பாதுகாப்புக்களை வழங்கியிருக்க முடியும்.

இந்தக் கைதிகள் மேலும் தாமதமின்றி விடுவிக்கப்பட வேண்டுமென நான் வலுவான கோரிக்கையை விடுக்கின்றேன்.

– என்று உள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நீதி அமைச்சர் தலதா அத்துக்கோறள, சட்டமா அதிபர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## அரசின் உள்நோக்கம் அம்பலம்

அரசியல் கைதிகளின் நிலைமையை ஒட்டி இன்று முழுக் கடையடைப்புக்கு - ஹர்த்தாலுக்கு - வடமாகாணம் தயாராகிவிட்டது.

ஒட்டுமொத்தத் தமிழர்களின் குரலை - மன உணர்வை - கருத்து நிலைப்பாட்டை - வெளிப்படுத்துவதாக இன்றைய கடையடைப்பு இடம்பெறும் என்பது திண்ணம்.

பொதுவாக அனைத்து அரசியல் கைதிகளதும் பரிதாப - அவல - நிலைமையை உலகுக்கு எடுத்துக் காட்டும் விதமாக இந்தக் கடையடைப்பு நடத்தப்பட்டாலும் -

மக்கள் எழுச்சியை வெளிப்படுத்தும் விதத்தில், இந்த விவகாரத்தை இம்முறை தட்டி, உசார்படுத்தி, தூண்டிவிட்டது அநுராதபுரம் சிறையில் இடம்பெறும் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டம் தான் என்பதை மறுப்பதற்கில்லை.

தங்களது வழக்குகள் திட்டமிட்ட ஒரு சூழ்ச்சி நடவடிக்கையாக வவுனியா மேல்நீதிமன்றத்தில் இருந்து அநுராதபுரம் மேல்நீதிமன்றத்துக்கு மாற்றப்படுகின்றமைக்கு ஆட்சேபம் தெரிவித்தே இந்தக் கைதிகள் மூவரும் கடந்த 18 நாள்களாக சாகும்வரையான உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்படி இந்த வழக்கை மட்டும் தனித்து இடம் மாற்றுவதன் பின்னணியில், ஏதோ ஒரு சூழ்ச்சி - சூக்குமம் - பின்புல இரகசியப் பொறி - மறைந்து கிடக்கின்றது என இந்த அரசியல் கைதிகளைக் கடந்தவாரம் அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று சந்தித்துவிட்டு வந்த வடக்கு மாகாண சபைக் குழுவின் தலைவரும், அந்தச் சபையின் அவைத் தலைவருமான சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்திருந்தார்.

அந்தச் சூக்குமம் என்ன என்பதை - வழமைபோல விடயங்களை அப்பட்டமாகவும் வெளிப்படையாகவும் பேசி, அரசியல் சர்ச்சையை ஏற்படுத்தும் - வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் போட்டுடைத்திருக்கின்றார்.

அவருக்கே உரித்தான நீதியரசர் மூளை, இந்த விவகாரங்களின் பின்புலத்தைத் தோலுரித்துக் காட்டி அம்பலப்படுத்தியிருக்கின்றது.

சரியான ஒருவர், சரியான சமயத்தில், சரியான உண்மையை, சரியான முறையில் அம்பலப்படுத்தியிருக்கின்றார்.

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்த பல நூற்றுக்கணக்கான புலிகளின் தலைவர்களை அரசுப்படைகள் கொன்றொழித்தன என்பதுதான் இன்றும் தொடர்ந்து சர்ச்சையாக நீடித்து, இலங்கை அரசுத் தரப்புக்கு மாறாத அபகீர்த்தியையும், சர்வதேச நெருக்கடியையும் தரும் விவகாரமாக உயர்ந்துள்ளது.

அதை சமநிலைப்படுத்துவதற்காக, யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் விடுதலைப் புலிகளும் தங்களின் பாதுகாப்பில் இருந்த படையினரைக் கொன்றார்கள் என்ற நீதிமன்றத் தீர்ப்பை வெளிப்படுத்தச் செய்யும் அரசியல் உள்நோக்குடன்தான், இந்த வழக்குப் புனையப்பட்டு, அந்தத் தீர்ப்பை உறுதிப்படுத்துவதற்காக வழக்கு அநுராதபுரம் நீதிமன்றத்துக்கு மாற்றப்படுகின்றது என்ற உண்மையைப் போட்டுடைத்திருக்கின்றார் முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

காரண, காரியங்களையும், வழக்கின் அடிப்படை விவகாரங்களையும் வைத்து நோக்கும் போது, இந்தப் பின்புலத்தின் சூட்சுமத்தைப் புரிந்துகொள்வது அப்படி ஒன்றும் கஷ்டமான விடயமே அல்ல.

அதுதான் உண்மை என்றால் -

அத்தகைய வஞ்சனை எண்ணத்துடன் சட்டத்தையே வசப்படுத்தி, அரசியல் உள்நோக்கத்துடன் செயற்படும் ஓர் அரசுடன், தமிழர்கள் நம்பிப் பயணிப்பது அர்த்தமற்றது என்றே தோன்றுகின்றது.

இத்தகைய அரசியல் உள்நோக்கத்துடன் வழக்குகளை முன்னெடுத்து அரசியல் லாபம் தேடும் ஓர் அரசுத் தலைமைக்கு என்ன காரணம் கொண்டும் முண்டு கொடுப்பது 'கோடரிக் காம்பு' வேலையன்றி வேறில்லை என்றே கருதுகின்றோம்.

இந்த நல்லாட்சி அரசுடன் தமிழர்கள் சார்பில் ஊடாட்டம் செய்வோர் - குறிப்பாக சம்பந்தன் ஐயா, சுமந்திரன் போன்றோர் - சட்டத்துறையில் அதீத தேர்ச்சி பெற்றவர்கள். இன்று முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் போட்டுடைத்திருக்கும் இந்த விவகாரம், அவர்களுக்கு முன்னரே தெரியாதா - அவர்கள் இதை அறிந்திருக்கவில்லையா - என்ற ஒரு கேள்வி எழுவது தவிர்க்க முடியாததே.

உண்மையில் அவர்கள் அரசின் சட்டத்துறைத் தரப்பின் இந்த சூழ்ச்சி உள்நோக்கம் குறித்து அறிந்திருக்கவில்லையா? அல்லது அறிந்திருந்தும் அது, இல்லாமல் அழிந்துபோன புலிகளின் பெயர், கீர்த்தி சம்பந்தப்பட்ட விடயம், அதற்காக ஏன் அரசுடன் முரண்படுவான் என்று கருதி வாளாவிருந்தார்களா? அல்லது அரசுப் படைகள் மீதான குற்றச்சாட்டுப் போல, புலிகள் மீதும் தம் வசம் இருந்த மாற்றுத் தரப்பு வீரர்களைக் கொன்றொழித்தார்கள் என்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமானால், இரு தரப்பிலும் தவறுகள் ஒரேமாதியாக இழைக்கப்பட்டிருக்கின்றன என்று கூறி, அதன் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வாய்ப்பு இலகுவாகும் எனக் கருதி விட்டுப் பிடித்தார்களா? - என்றெல்லாம் கேள்வி எழுகின்றது.

முதல்வர் விக்னேஸ்வரன் இப்போது அம்பலப்படுத்தியிருக்கும் சூழ்ச்சித்திட்டம் தொடர்பில் தமிழக் கூட்டமைப்புத் தலைமை தனது நிலைப்பாட்டை வெளிப்படையாகக் கூறுவது முக்கியம். தமிழ்ச் சமூகம் அதனை அவர்களிடமிருந்து உரிமையுடன் எதிர் பார்க்கின்றது.


முதல்வர் விக்னேஸ்வரன் கூறும் சூழ்ச்சித் திட்டத்துடன்தான் இந்த வழக்கு அநுராதபுரம் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டிருக்குமானால், அத்தகைய செயற்பாட்டில் ஈடுபடும் அரசை தமிழர் தரப்பு இனிக் கையாள்வதில் புதிய அணுகுமுறை அவசியமாகும்.

---

### அரசியல் கைதிகள் விவகாரம்:

# அரசின் போக்கால் தமிழ்த் தலைமைகள் மீது தமிழ் மக்கள் வெறுப்புக் காட்டும் நிலைமை

### சுட்டிக்காட்டுகின்றார் குமரகுருபரன்



இந்த அரசு, இணக்கஅரசியல் செய்யும் தமிழ் தலைவர்கள், அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தாது தவறிழைத்துள்ளனர் என தமிழ் மக்களை நினைக்க வைத்துள்ளது என்பதை தமிழரசுத் தலைவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் பொதுச்செயலாளர் முனைவர் நல்லையா குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகளின் விடுதலை மனிதாபிமானம் அற்றநீதியில் காலம் கடந்து செல்கின்றது. இன்று அரசிற்கு நல்லிணக்க ஆதரவு நல்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு சாராரை தமிழ் மக்கள் வெறுக்கும் நிலைக்கு இது தள்ளிவிட்டிருக்கின்றது என்பதை அரசும் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் வெறுத்த கடந்த மஹிந்த அரசால் 14 ஆயிரம் புலிகள் அல்லது புலிச் சந்தேக நபர்கள் புனர்வாழ்வளித்தோ இல்லாமலோ விடுதலை செய்யப்பட முடியுமானால் ஏன் இந்த இருநூற்றுக்கும் குறைவான கடும் புலிகளல்லாத தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யமுடியவில்லை?

இதற்கு வல்லமை இல்லாதவர்களா தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைவர்கள் எனும் எண்ணம் இன்று தமிழ்மக்கள் மனதில் உருவாகுவதற்கு நியாயம் உண்டு.

தமிழ் தலைமை- குறிப்பாக சம்பந்தர் ஐயாவும் சுமந்திரனும் - மனம் வைத்தால் பிரதமர் அளவில் பேசப்பட்டு தீர்வு காணப்படமுடியும். அதை விடுத்துச்சட்டமாஅதிபருடனும் நீதி அமைச்சருடனும் பேசுவோம் என்பது காத்திரமான விடயமல்ல என்பதே புத்திஜீவிகளின் கருத்து.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை அவர்களின் பொறுமையை இழக்கவைத்துள்ளது நியாயமே. அரச தலைமையும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை தலைமை ஏற்று முன்னிலை வகிப்பவர்களும் இவர்களின் உடனடியான விடுதலைக்கு வழிவகுக்க வேண்டும். தயவு செய்து அவர்களது மனஉளைச்சலை, மனவேதனையை, மனிதாபிமான நிலை நின்று தீர்வு காணுங்கள்:- எனவும் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் பொதுச்செயலாளர் முனைவர் நல்லையா குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

---

# லஸந்த விக்கிரமதுங்க படுகொலை வழக்கில் 295 புலனாய்வுப் பிரிவினரிடம் வாக்குமூலம்!

கொழும்பு, ஒக். 13

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை வழக்கில், இதுவரை இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 295 பேரிடம் வாக்குமூலம் பெற்றிருக்கின்றோம் என இரகசிய பொலிஸார் நேற்று கல்கிஸை நீதிவான் நீதிமன்றில் தெரிவித்தனர்.



லசந்த விக்கிரமதுங்கவின் கொலை வழக்கு நேற்று கல்கிஸை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது அங்கு ஆஜரான இரகசிய பொலிஸ் பிரதிநிதி, பெறப்பட்ட வாக்குமூலங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி சம்பாஷனை கள்குறித்த விவரங்கள் இதுவரை தமக்குக் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, வழக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 18ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (க)

---

# பொது மக்களின் சிரமங்களைக் குறைப்பதற்கு விசேட வேலைத் திட்டம் - அமைச்சர் நிமால்!

ரயில்வே தொழில் சங்க நடவடிக்கையால் பொதுமக்கள் எதிர்கொண்டுள்ள சிரமங்களைக் குறைப்பதற்கு விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் என்று போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து அமைச்சில் நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வேலை நிறுத்தம் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணிக்குஆரம்பிக்கப்படும்என்று ஏற்கனவே அறிவித்திருந்த நிலையில் மாலை 5 மணிக்கே வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டமை ஏற்றுக்கொள்ள முடியாத செயலாகும்.

மக்களை நெருக்கடிக்குள் உள்ளாக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட இந்தச் செயற்பாடு பற்றிப் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் விசேட விசாரணையை ஆரம்பிக்குமாறு ரயில்வே பொதுமுகாமையாளருக்குப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

இதனால், மக்களுக்கு ஏற்படும் சிரமங்களைத் தடுப்பதற்காக விசேட பஸ் சேவைகள் அமுலாகின்றன.

வேலை நிறுத்தம் முடிவடையும் வரை தற்காலிகமான முறையில் அனுமதிப்பத்திரம் இல்லாதபஸ்வண்டிகளையும்சேவையில் ஈடுபடுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

---

**உலக மார்பகப் புற்றுநோய் விழிப்பூட்டல் மாதம் ஐப்பசி - 2017**

இந்தப் புற்றுநோய் மிக ஆரம்ப நிலையில் கண்டறியப்படுமாயின், மிகச்சிறந்த சிகிச்சை முறைக்கு வழி சமைப்பதோடு, மார்பகத்தைச் சத்திர சிகிச்சை மூலம் மீளக் கட்டியமைக்கவும், அதன்மூலம் இறுதிவரை உங்கள் உடல் அழகைப் பாதுகாக்கவும் முடியும்.




தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

## நாளை

14.10.2017
சனிக்கிழமை

நட்சத்திரம் : பூசம் மு.ப. 10.07 வரை
திதி : நவமி கா. 6.09 வரை
சுபநேரம் : 3.02 – 4.32 வரை
இராகுகாலம்: 9.02 – 10.32 வரை

# ஆளில்லா விமானங்களால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்!

கொழும்பு, ஒக். 13

ட்ரோன் எனப்படும், ஆளில்லா விமானங்களால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் கபில ஜெயம்பதி தெரிவித்துள்ளார்.

விமானப்படைத் தலைமையகத்தில் இடம் பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போதைய சூழ்நிலையில், தொழில்நுட்பம் விரைவாக வளர்ந்து வருகிறது. இந்த நிலையில், ட்ரோன்கள் மற்றும் ஏனைய ஆளில்லா விமானங்களால் தேசிய பாதுகாப்புக்கு ஏற்படக் கூடிய அச்சுறுத்தல்களைத்தடுக்கநடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

உலகம் முழுவதிலும் ட்ரோன்கள் மற்றும் அது போன்ற பறக்கும் பொருள்கள், பாதுகாப்புக்கான பிந்திய அச்சுறுத்தலாக மாறியுள்ளன.

தொழில்நுட்ப வளர்ச்சி வாழ்க்கையை இலகுபடுத்துகிறது. ஆனால், ட்ரோன் போன்ற பொருள்கள், எந்தவொரு நாட்டினதும் பாதுகாப்புக்குப் பெரிய அச்சுறுத்தலாக மாறியுள்ளன.

பயங்கரவாதிகள் மற்றும் துரோகிகள் சமூகத்தில் அச்சத்தை உருவாக்க ட்ரோன்களைப் பயன்படுத்தலாம்.

இந்த அச்சுறுத்தல்கள் எவ்வாறு குறைக்கலாம் என்பதில் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தற்போது ஒரு கிலோவுக்கு அதிக எடையுள்ள ட்ரோன்களை வைத்திருப்பவர்கள் அதனைப் பயன்படுத்துவதற்கு, சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் அனுமதியைப் பெற வேண்டும்.

இலங்கை விமானப்படையும், இதற்கு அனுமதி வழங்கப்படுவதைக் கண்காணித்து வருகிறது.

இதுபோன்ற அச்சுறுத்தலை ஏற்படுத்தும் விடயங்கள் தொடர்பாக சர்வதேச படைகளுடன் இலங்கை விமானப் படை நிபுணத்துவத்தை பரிமாறிக் கொள்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)



இலங்கை விமானப்படைத் தளபதி கூறுகிறார்

## விலங்கு வேட்டைக்கு வந்தோரின் துப்பாக்கிச் சூட்டில் சட்டவிரோதமாக மரம் வெட்டச் சென்ற இருவர் பலி!

கொழும்பு, ஒக். 13

புத்தளம் - தப்போவ சரணாலயத்துக்கு சொந்தமான சியம்பலேவ காட்டுப்பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கருவலகஸ்வெவ - சியம்பலேவ பிரதேசத்தை சேர்ந்த 18 மற்றும் 31 வயதுடையவர்களே உயிரிழந்துள்ளனர்.

இந்தக் காட்டுப்பகுதிக்குள் மரங்களை வெட்டுவதற்காக 4 பேர் சென்றுள்ளனர். இந்த நால்வர் மீதும் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்திலேயே இருவர் படுகாய மடைந்த நிலையில், புத்தளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர் என்றும் அவர்கள் விலங்கு வேட்டைக்காக காட்டுப்பகுதிக்கு சென்றவர்களாக இருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கருவெலகஸ்வெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (க)

## பன்றி லொறியுடன் மீன் லொறி மோதல் விபத்து!



கொழும்பு, ஒக். 13

கொழும்பிலிருந்து மாத்தறை கடுவன நோக்கி பன்றி இறைச்சிகளை ஏற்றிச் சென்ற லொறியொன்று, மீன்கள் ஏற்றி வருவதற்காக வெலிகம, மிரிஸ்ஸ நோக்கி சென்று கொண்டிருந்த லொறியுடன் மோதுண்டு விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் மூவர் காயமடைந்துள்ளனர். அதில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்து தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் 34 ஆவது கிலோமீற்றர் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

விபத்துக்குள்ளான லொறியிலிருந்து வீழ்ந்த பன்றி இறைச்சியின் பாகங்கள் வீதியில் சில மீற்றர் தூரத்துக்கு சிதறிக் காணப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த இரு லொறிகளின் சாரதிகளும், உதவியாளர் ஒருவரும் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றுவரும் சாரதி உதவியாளரின் நிலையே கவலைக்கிடமாக உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தால் இரு லொறிகளுக்கும் அதிவேக நெடுஞ்சாலையின் பாதுகாப்பு வேலிக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது எனச் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்தினால் காலி நோக்கிய அதிவேக நெடுஞ்சாலையின் ஓர் ஒழுங்கை சில மணிநேரங்களுக்கு மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மத்திய கிழக்கு நாட்டுக்குச் சென்ற இலங்கைப் பெண் சடலமாக திரும்பினார்!



மத்திய கிழக்கு நாடு ஒன்றுக்கு தொழிலுக்காகச்சென்ற இலங்கைப் பெண் ஒருவர் உயிரிழந்த நிலையில், அவரது சடலம் நேற்றுமுன்தினம் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

பசறையைச் சேர்ந்த 36வயதானபெண்ணே உயிரிழந்துள்ளார். இந்தப் பெண்ணுக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர்எனத்தெரிய வந்துள்ளது.

இவர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலுக்காக சென்றிருந்த நிலையில் பல்வேறு துன்புறுத்தல்களை எதிர்நோக்கியிருந்தார் என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பெண் ஆறு மாதங்களுக்கு முன்னதாகவே உயிரிழந்துள்ளார் என்றும் அவரது உடல் நேற்று முன்தினம் தான் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்படுகிறது.

இந்த மரணம் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (க)

## ஷலீல முனசிங்கவின் மோசடி தொடர்பாக ஆராய தாய்வானிய வங்கி அதிகாரிகள் இலங்கை வருகை!

வங்கிக் கணக்குகளை முடக்கி சட்டவிரோதமாக குறித்து ஆராய்வதற்காக, தாய்வானின் 'பார் ஈஸ்டர்ன்' வங்கி அதிகாரிகள் மற்றும் விசாரணை அதிகாரிகள் இருவரும் இலங்கை வந்துள்ளனர்.

இந்தத் தகவலை பொலிஸ் வட்டாரம் உறுதி செய்துள்ளது.இந்த மோசடி தொடர்பாக ஏற்கனவே 'லிட்ரோ கேஸ்' நிறுவனத்தின் முன்னாள் தலைவர் ஷலீல முனசிங்க உட்பட இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தாய்வானின் பார் ஈஸ்டர்ன் வங்கியில் இருந்து சந்தேகத் துக்கு இடமான முறையில் ஒரு கோடியே இருபது லட்சம் அமெரிக்க டொலர்கள்இலங்கை வங்கிக் கணக்கொன்றுக்கு மாற்றப்பட்டுள்ளது.

அந்தக் கணக்கில் இருந்து பணம் பெறப்பட்டதையடுத்து இலங்கை வங்கி அளித்த முறைப்பாட்டின் பேரிலேயே இந்த மோசடி தெரியவந்துள்ளது. லிட்ரோ கேஸ் முன்னாள் தலைவர் ஷலீல, 2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போட்டியிட்டு வெற்றி பெற்ற புதிய ஜனநாயக முன்னணி கட்சியின் தலைவர்களுள் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வேலை நிறுத்தத்திலும் இயங்கும் ரயில்கள்!

கொழும்பு, ஒக். 13

ரயில் ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் தொடரும் நிலையிலும், சில ரயில் சேவைகளைத் தாம் நடத்தி வருகிறார்கள் என இலங்கை ரயில் சேவைகள் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

இது பற்றிப் பேசிய ரயில் திணைக்களக் கண்காணிப்பாளர் விஜய சமரசிங்க -

மாத்தறை, அவிசாவளை, மஹாவை மற்றும் பொல்கஹவலை ஆகிய பகுதிகளில் இருந்து கோட்டை வரை நடத்தப்படும் ரயில் சேவைகள் தொடர்ந்தும் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றன எனத் தெரிவித்துள்ளார்.

புதிய பயிலுநர் என்ஜின் சாரதிகளைப் பணியில் இணைத்துக்கொண்ட செயற்பாட்டில் விதிமுறைகள் மீறப்பட்டுள்ளமையை எதிர்த்து நேற்று முன்தினம் இரவு சுமார் ஒன்பது மணியளவில் ரயில் என்ஜின் சாரதிகள் மற்றும் காப்பாளர்கள் கால வரையறையற்ற வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

தற்போது வரை தொடரும் இந்த வேலை நிறுத்தத்தால், பொதுமக்கள் கடும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். (க)

# வடக்குக் கிழக்குப் பிரச்சினையை தீர்க்கும் கடமை இந்தியாவுடையது!

## ஈழவர் ஜனநாயக முன்னணி தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஒக். 13

இந்தியா தான் போராட்டத்தை ஆரம்பித்து வைத்தது, 2009 இல் முடித்தும் வைத்தது.அந்த வகையில் வடக்குக் கிழக்குப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டிய தார் மீகக் கடமை இந்தியாவுக்கு இருக்கிறது என ஈழவர் ஜனநாயக முன்னணியின் (ஈரோஸ்) செயலாளர் நாயகம் இராஜநாதன் பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, கல்லடி 'வொயிஸ் ஒவ மீடியா' நிறுவக மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மஹிந்த ஆட்சியை முடிவுக்கு கொண்டு வருவதற்காக மைத்திரி - ரணில் நல்லாட்சிக்காக தமிழ் மக்கள் வாக்களித்து வெற்றியடைய வைத்தார்கள் ஆனால் தற்போது மக்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. ஏமாந்திருக்கிறார்கள்.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவேண்டிய பொறுப்பு எல்லோருக்கும் இருக்கிறது. அந்த வகையில் மாற்றம் ஒன்றே தேவையாக இருக்கிறது.

அதற்காக எமது கட்சி செயற்பட்டு வருகிறது. வடக்கு கிழக்கு மலையகப் பிரதேசங்களில் இதற்கான முன்னெடுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடையும் நேரத்தில் மாத்திரமல்ல அதற்கு முன்னரும் பல பணிகளை ஈரோஸ் மேற்கொண்டிருக்கிறது.

ஏனைய ஆயுத அமைப்புக்கள் இலங்கை இராணுவத்துடனும், இந்திய இராணுவத்துடனும் சேர்ந்து தமிழ் மக்களைத்துணைப்படையாக இருந்து சித்திரவதைகள் பல வற்றைச் செய்து கொண்டிருந்த வேளை, ஈரோஸ் கணிசமான இளைஞர் யுவதிகளைக் காப்பாற்றியது; மக்களுக்குப் பாதுகாப்பை வழங்கியது.

அதே நேரத்தில் வன்னி யுத்தம் முடிவுக்கு வரும் வேளையில் வவுனியாவில் களத்தில் நின்றது.

நடைபெறப்போகும் உள்ளூராட்சித் தேர்தலானாலும், மாகாண சபைத் தேர்தலா னாலும் சரி ஒரு மாற்றத்தின் ஊடாக வடக்கு கிழக்கு மலையக மக்களுக்காக ஈரோஸ் தனித்துப்போட்டியிடும். அதன் மூலம் கணிசமான ஆசனங்களையும் பெற்றுக் கொள்ளும்.



சம்பந்தன் 45 வருடங்களாக எதனைச் சாதித்திருக்கிறார்? எதனைப் பெற்றுக் கொடுத்திருக்கிறார்?. எதனைச்சாதிக்கப் போகிறார் ஒன்றுமில்லை. எல்லாம் பூச்சியம்.

மக்கள் இன்று வெளியில் வந்துவிட்டார்கள். இவர்களால் முடியாது. வட கிழக்கு இணைகிறதா, இல்லையா என்பதற்கு அப்பால் வடக்கு கிழக்கு மக்களுக்கு என்ன அதிகாரம் வேண்டும்? மாகாண சபைக்கு என்ன அதிகாரம் வேண்டும்.- என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனிமேல் தீர்மானிக்க முடியாது.

சம்பந்தனின் அரசியல் வரலாறாக இருக்கட்டும், அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் வரலாறாக இருக்கட்டும்.

இதுவரை தமிழ் மக்களுக்கு அது ஒரு தீர்வுத் திட்டத்தை முன் வைத்திருக்கிறதா என்றால் இல்லை என்றும்.- ஈழவர் ஜனநாயக முன்னணியின் செயலாளர் நாயகம் இராஜநாதன் பிரபாகரன் குறிப்பிட்டுள்ளார். (க)

## வாழைச்சேனை கடலில் சிக்கிய புலிச்சுறா!



மட்டக்களப்பு, ஒக். 13

மட்டக்களப்பு - வாழைச்சேனையில் கரையோர காவற் படையினரால் அரியவகை மீன் ஒன்று பிடிபட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மீன் பிடிப்பதற்கு நேற்று முன்தினம் கடலுக்குச் சென்று திரும்பிய படகு ஒன்றில் இருந்தே இந்த மீன் கைப்பற்றப்பட்டுள்ளது.

பிடிப்பதற்கு தடைசெய்யப்பட்ட 160 கிலோ கிராம் நிறையுடைய புலிச்சுறா எனும் மீன் ஒன்றே இவ்வாறு படகிலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

வாழைச்சேனை மீன்பிடி துறைமுக பகுதியில் வைத்து இந்த புலிச்சுறாவைக் கரையோர காவற்படையினர் கைப்பற்றியுள்ளனர். இந்த வகை மீன் இனம் தடை செய்யப்பட்டது என்பது தாங்கள் அறிந்திருக்கவில்லை என்று படகில் வந்த மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மீன் இனம் கடல்வாழ் பேரினத்தில் எஞ்சியிருக்கக் கூடிய ஒரே சுறா இனம் என்பதுடன் இதனை 'கடற்புலி' என்றும் இதன் உடலில் காணப்படும் ஆழ்ந்த கோடுகள் புலியின் தோலைப் போல ஒத்திருப்பதால் 'புலிச்சுறா'' என்றும் அழைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## திருகோணமலையில் முக்கிய பேச்சில் ஈடுபட்டார் ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர்!

மட்டக்களப்பு, ஒக். 13

உத்தியோகபூர்வ பயணமாக இலங்கை வந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிரீஃப் நேற்று திருகோணமலைக்கு விஜ யம் மேற்கொண்டுள்ளார்.

இந்த விஜயத்தின் போது மனித உரிமைகள்ஆர்வலர்அருட்தந்தை யோகேஸ்வரனை ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இருவருக்கும் இடையிலான சந்திப்பின் போது இலங் கையின் சமகால நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்த சந்திப்பு முக்கியத்துவம் பெற்ற ஒன்றாகப் பார்க்கப்படுகின்றது.



கடந்த காலங்களில் இடம் பெற்ற ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தொடர்களின் போது, அதில் கலந்துகொண்ட அருட்தந்தை யோகேஸ்வரன், இலங்கையின் நிலைமைகள் பற்றி அறிக்கை சமர்ப்பித்திருந்தார்.

இதன் காரணமாக இருவருக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பு அரசியலில் முக்கியமான விடயமாகப் பார்க்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மு.கா. உயர்பீட உறுப்பினர் வாகன விபத்தில் உயிரிழப்பு!



முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.ரி.ஹசன் அலியின் சகோதரரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட உயர் பீட உறுப்பினருமான ஜப்பார் அலி(வயது 57) வாகன விபத்தில் சிக்கி நேற்று உயிரிழந்துள்ளார்.

நிந்தவூரிலிருந்து, திருமலை நோக்கிச் சென்ற இவரது காரும், எதிர்த்திசையில் வந்த பேருந்து ஒன்றும் கிண்ணியா பாலத்துக்கு அருகிலுள்ள உப்பாறு எனும் இடத்தில் நேற்று முன்தினம் மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில், வாகனத்தில் இவருடன் கூடச் சென்ற மூவரும் காயங்களுக்கு உள்ளாகினர். அத்துடன், படுகாயங்களுக்கு உள்ளான லாபீர் மற்றும் ஜப்பார் அலி ஆகியோர் கிண்ணியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக திருமலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை ஜப்பார் அலி உயிரிழந்துள் ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க)

# ஐ.நா. நிபுணர்களின் பரிந்துரைகள் இலங்கை அரசைக் கட்டுப்படுத்தா!

கொழும்பு, ஒக். 13

ஐ.நா. சிறப்பு நிபுணர்களின் பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகள் அரசைக் கட்டுப்படுத்தா என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை அரசின் அழைப்பின் பேரில், உண்மையை ஊக்குவித்தல், நீதி, இழப்பீடு மற்றும் மீள நிகழாமையை உத்தரவாதப்படுத்துவதற்கான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிரெய்ப் இலங்கைக்கு வந்துள்ளார்.

இவரது பயணம் தொடர்பாக, ஊடகங்கள் பலவற்றில் வெளியிடப்பட்டுள்ள தவறான தகவல்கள் தொடர்பாக, இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

ஐ.நா. சிறப்பு நிபுணர்களின் பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகள் அரசுகளைக் கட்டுப்படுத்தா. ஆனால், சிறப்பு அறிக்கையாளர்களின் அனுபவம் மற்றும் ஆற்றலை, அரசுகள் ஒரு வளமாக பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆற்றலைக் கட்டியெழுப்புதல், கொள்கை வகுப்பு, கொள்கை மறுசீரமைப்பு, பயிற்சி தேவைகளைக் கருத்தில் கொண்டு,

அரசு தேவைப்பட்டால், ஐ.நா. நிபுணர்களின் ஆலோசனைகள் மற்றும் நிபுணத்துவத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இலங்கையில் பதவியில் இருந்த அரசுகள், சில குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாகக் கருத்துக்கள் மற்றும் நிபுணத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கு இது போன்ற சிறப்பு அறிக்கையாளர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தன.

பப்லோ டி கிரெய்ப், குறிப்பிட்ட ஒரு விடயத்தில் சுதந்திரமான ஒரு நிபுணர். சிறப்பு அறிக்கையாளர்கள், மனித உரிமைகள் தொடர்பாக, ஒரு விடயம் சார்ந்து அல்லது, நாட்டின் அணுகுமுறை சார்ந்து அரசுகளுக்கு ஆலோசனை கூறும், அறிக்கை சமர்ப்பிக்கும் ஆணை பெற்றவர்கள்.

சிறப்பு அறிக்கையாளர் பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்திய அணுகு முறையை பின்பற்றுவர். பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்திய அணுகுமுறை என்பதன் அர்த்தம், மோதல் சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட அனைவரையுமே குறிக்குமே தவிர, ஒரு சமூகத்தையோ, குழுவையோ அல்ல.

அவரது பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகள் இலங்கை மக்களுக்குப் பயன ளிக்குமா என்பதையும், அவரது ஆற்றல், நிபுணத்துவம், ஆலோசனை, என்பனவற்றை மேலும் பெறுவது தொடர்பாகவும் இலங்கை அரசே தீர்மானிக்கும். என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இனவாதமே மஹிந்தவை தோற்கடித்தது– ராஜித!



கொழும்பு, ஒக். 13

மஹிந்த ராஜபக்ஷ கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டமைக்கு இனவாதமே காரணம் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பாதுகாப்புச் செயலராக இருந்த தனது சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷவையும், சிங்கள பௌத்த அடிப்படைவாத அமைப்புகளையும் மஹிந்த ராஜபக்ஷ கட்டுப்படுத்தத் தவறி விட்டார். அதனால், சிறுபான்மையினர் அந்நியப்பட்டு, அவருக்கு எதிராக அதிபர் தேர்தலில் வாக்களித்தனர்.

மஹிந்த ராஜபக்ஷ ஒரு பருவகால அரசியல்வாதியாக இருந்தார். ஆனாலும், சிங்கள பௌத்த வாக்குகளுடன் மாத்திரம் மூன்றாவது தடவையும் ஆட்சியைப்பிடித்து விடலாம் என்று தவறாக எடை போட்டிருந்தார். உணர்வுகள் அவரது பலத்தைக் குறைத்து விட்டன.

பசில் ராஜபக்ஷ மாத்திரமே, சிறுபான்மையினரின் வாக்குகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டிருந்தார்.

ஆனால், கோட்டாபய ராஜபக்ஷவின் கருத்துக்களையே மஹிந்த ராஜபக்ஷ செவிமடுத்தார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இடைக்கால அறிக்கைக்கு அங்கீகாரம் அளிக்கக்கூடாது!



## ஜனாதிபதி மைத்திரியிடம் கோரிக்கை விடுத்தார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, ஒக். 13

புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளிக்காமல் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், தேசிய சுதந் திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் உறுப்பினர்கள் நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன் போதே, இடைக்கால அறிக்கையை அமைச்சரவை அங்கீகரிக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துமாறு ஜனாதிபதியிடம் விமல் வீரவன்ஸ கோரியுள்ளார்.

இடைக்கால அறிக்கை நாட்டைப் பிளவுபடுத்தும் என்றும் இந்தச் சந்திப்பின் போது விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்பு தொடர் பாக இறுதி முடிவு எடுப்பதற்கு முன்னதாக, அனைத்து அரசியல் கட்சிகளினதும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடப்பட வேண்டும் என்றும் அவர் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளார்.

# இந்திய – இலங்கை படைகளின் ‘மித்ரசக்தி’ கூட்டுப் பயிற்சி ஆரம்பம்!

இந்திய- இலங்கை இராணுவத்தினருக்கு இடையிலான ‘மித்ர சக்தி- 2017-2 ’கூட்டுப் பயிற்சி இன்று ஆரம்பமாக உள்ளது.

புனேயில் உள்ள அவுண்ட் இராணுவ முகாமில் இந்தக் கூட்டுப் பயிற்சி எதிர்வரும் 25ஆம் திகதி வரை தொடர்ந்து இடம்பெறும்.

இந்தக் கூட்டுப் பயிற்சி தெற்கு ஆசியா மற்றும் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில், அதிகரித்து வரும் சீனாவின் செல்வாக்குக்குப் பதிலளிக்கும் வகையிலான இந்தியாவின் முக்கியமான நகர்வாகக் கருதப்படுகிறது என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.



சிறந்த இராணுவ நடைமுறைகளை இரண்டு நாடுகளுக்கும் இடையில் பரிமாறிக் கொள்வதும், இரண்டு இராணுவங்களுக்கும் இடையில் பலமான இராணுவ உறவுகளைக் கட்டியெழுப்புவதும் இந்தக் கூட்டுப் பயிற்சியில் நோக்கம் என்று இந்திய இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஐந்தாவது ஆண்டாகத் தொடர்ந்து நடத்தப்படவுள்ள ‘மித்ர சக்தி’ கூட்டுப் பயிற்சியில், கிளர்ச்சி முறியடிப்பு, தீவிரவாத முறியடிப்பு நடவடிக்கைகளில் முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளது.

இரண்டு வாரங்கள் நடக்கவுள்ள இந்தப் பயிற்சி, ஆயுதப் பயிற்சி, அடிப்படை இராணுவ தந்திரங்கள் மற்றும் தளச்சமர் மூலோபாயங்களை உள்ளடக்கியதாக இடம் பெறும்.

எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறும் இறுதி ஒத்திகைப் பயிற்சியின்போது, இரண்டு நாடுகளினதும், மூத்த இராணுவ கண்காணிப்பாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

தெற்காசிய மற்றும் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில், செல்வாக்கை அதிகரிக்கும் சீனாவின் முயற்சிகளுக்கு பதிலளிக்கும் வகையில், ‘மின்ர சக்தி’ என்ற இராணுவக் கூட்டுப் பயிற்சியை 2012 ஆம் ஆண்டு இந்தியா ஆரம்பித்திருந்தது.

# திடீர் அனர்த்த இழப்புகளை குறைக்கும் ஒத்திகை நிகழ்வு

திடீர் அனர்த்த இழப்புகளைக் கட்டுப்படுத்துவதற்கான முழு அளவிலான அனர்த்த முன்னெச்சரிக்கை ஒத்திகை நிகழ்வு ஒன்றை வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த சுனாமி அனர்த்தத்தின் போது யாழ். மாவட்டத்திலேயே கூடுதலான பாதிப்பைச் சந்தித்த வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில், கூடிய உயிரிழப்புகள் ஏற்பட்ட உடுத்துறை, ஆழியவளை ஆகிய கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு சர்வதேச அனர்த்த குறைப்பு தினமான இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரையும் இந்த அனர்த்த முன்னெச்சரிக்கை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அனைத்து உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், பொலிஸார் மற்றும் முப்படையினரும் பங்குதாரர்களாகச் செயற்படுவதற்கான ஆயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## தினசரி ராசி பலன் 13.10.2017

*2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் புரட்டாதித் திங்கள் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை. நவமித் திதி பி.இ. 3.22 மணிவரை. பின்னர் தசமி. நட்சத்திரம் புனர்பூசம் காலை 7.46 மணிவரை. பின்னர் பூசம். சித்தயோகம் காலை 7.46 மணிவரை. பின்னர் அசுபயோகம்.*

**ராகுகாலம்** - *பகல் 10.27 மணிமுதல் 11.56 மணிவரை.*

**சுபநேரம்** - *காலை 6.02 மணிமுதல் 7.32 மணிவரை.*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *புரட்டாதி மாத தேய்பிறை நவமி.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *புனர்பூசம்.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம் :** சஞ்சலமான நாள். பணவரவு குறையும். நினைத்தகருமங்கள் தோல்வியைத் தரும். வியாபாரம் மந்த கதியில் நடக்கும். தொழிலில் பலர் போட்டி போடுவார்கள். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**ரிஷபம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். வீண் செலவுகளும், வீண் அலைச்சல்களும் உண்டாகும். தொழிலில் பிரயாசை அதிகரிக்கும்.

**மிதுனம்:** யோகமான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தில் மேலதிக லாபம் கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு கௌரவப் பதவிகள் தேடிவரும்.

**கடகம் :** அதிஷ்டமான நாள். தனலாபம் பெருகும். சிலருக்குத் தொழில் நிமித்தம் வெளிநாடு செல்லும் அதிஷ்டம் தேடிவரும். இதுவரை இழுபறியிலிருந்த பூர்வீக சொத்துகள் கைக்கு வந்துசேரும்.

**சிம்மம் :** கவலையான நாள். வரவேண்டிய பணம் வரத் தாமதமாகும். உடலில் ரோகங்கள் உண்டாகி, மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். பிள்ளைகளால் கவலை உண்டாகும்.

**கன்னி :** நன்மையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும். சகோதர வழியால் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் சலுகை கிடைக்கும்.

**துலாம் :** சம பலன்கள் காணப்படுகின்றன. எந்தக் காரியத்தையும் இரண்டு, மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிவரும். வருமானம் சுமாராக இருக்கும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** யோகமான நாள். பணம் பல வழிகளாலும் வந்துசேரும். அரச காரியங்கள் அனுகூலமாகும். விலையுயர்ந்த வீட்டுப் பொருள்களை வாங்குவார்கள். சிலருக்கு வெளிநாட்டில் வேலை கிடைக்கும்.

**தனுசு :** துயரமான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். வியாபாரம் தளம்பல் நிலையில் இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலையில் கடினமும், சக ஊழியர்களின் தொந்தரவும் இருக்கும்.

**மகரம்:** மத்திமமான நாள். வரவுக்குமீறிய செலவுகள் உண்டாகும். பொருளாதாரம் சுமாராக இருக்கும். தேக நலக்குறைபாட்டால் மருத்துவச் செலவுகள் உண்டாகும். தொழிலில் கடின உழைப்புக் காணப்படும்.

**கும்பம்:** இனிமையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். வேலை தேடுவோருக்கு வேலை கிடைக்கும். நண்பர்கள், உறவினர்களுடன் சேர்ந்து சிலர் புண்ணிய தல யாத்திரை மேற்கொள்வார்கள்.

**மீனம்:** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. தனவரவு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் மதிப்பார்கள். பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரம் ஆக்கபூர்வ முன்னேற்றம் அடையும்.

சந்திராட்டமநாள்: மூலம், பூராடம், உத்தரம் முதலாம் கால் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று சுபகருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

# இலங்கையை சூறாவளி தாக்கும் அபாயநிலை!

## வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை!



இலங்கையை சூறாவளி தாக்கும் அபாயம் உள்ளது என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இந்த மாதம் முதல் எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் இந்த ஆபத்து காணப்படுவதாக திணைக்களம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறு திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

காற்றழுத்தம், வளிமண்டலத்தில் குழப்பநிலை போன்றவைகள் எதிர்வரும் நாள்களில் ஏற்படக்கூடும் எனவும், அதன் ஊடாக எந்த ஒரு நாள்களிலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மழை பெய்யக் கூடும் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இந்த மாதம் இலங்கையின் வெப்ப மண்டலத்தில் அழுத்தம் ஏற்படக்கூடும் என்பதனால் இடியுடன் கூடிய மழை பெய்யும் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோவா விமான நிலையத்தில் 3 இலங்கையரிடம் தங்கம் பறிமுதல்!

கொழும்பு, ஒக். 13

இலங்கையர் மூவர் அணிந்திருந்த மற்றும் துணிகளுக்கு இடையில் மறைத்து வைத்திருந்த 1.5 கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தமிழகம் - கோவை விமான நிலையத்தில் வைத்தே இந்தத் தங்க நகைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து கோவை சென்ற விமானத்தில், விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையின் போது குறித்த மூவரும் அணிந்திருந்த மற்றும் துணிகளுக்கு இடையில் மறைத்து வைத்திருந்த 1.5 கிலோ தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது.

இதன்போதே அதிகாரிகள் இதனை பறிமுதல் செய்துள்ளனர் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சுங்கவரி செலுத்தாமையின் காரணமாக இந்த நகைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், உரிய சுங்க வரி மற்றும் அபராதத் தொகையை செலுத்தினால் மீளவும் நகைகள் கையளிக்கப்படும் என சுங்க திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

# புதையல் தோண்டிய ஒன்பது பேர் கைது!

ஹபரணை, பலுகஸ்வெவ பகுதியில் புதையல் வேட்டையில் ஈடுபட்டார்கள் என சந்தேகத்தின் பேரில் ஒன்பது பேர் கைது செய்யப்பட்டனர்.

ஹபரணை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றின் பேரில் தேடுதல் வேட்டை நடத்திய போதே இந்த ஒன்பது பேரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் வசமிருந்த அகழ்வு உபகரணங்களும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

ஹபரணை, தம்புள்ளை, கந்தளாய், இனமலுவ பகுதிகளைச் சேர்ந்த சந்தேக நபர்கள் ஒன்பது பேரும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

# நாளை மின்தடை

யாழ்ப்பாணம், ஒக். 13

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியில் இருந்து மாலை 5 மணிவரை

**யாழ். பிரதேசத்தில்**- வேலணைச் சந்தியிலிருந்து துறையூர்வரை, மடத்துவெளி, வல்லான், ஆலடி சந்தி, புங்குடுதீவு, இறுப்பிட்டி, குறிகட்டுவான், புங்குடுதீவு கடற்படை முகாம் -

**கிளிநொச்சி பிரதேசத்தில்** - காலை 8 மணியில் இருந்து 5 மணிவரை சிலாவத்தை, உடுப்பிக்குளம், அளம்பில், குமுழமுனை, செம்மலை, நாயாறு, கொக்குத்தொடுவாய், கருநாட்டன்கேணி, கொக்கிளாய், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம் -

**வவுனியா பிரதேசத்தில்** - காலை 8 மணியில் இருந்து மாலை 5.30 மணிவரை அட்டம்பஸ்கட கிராமம், தவசிக்குளம் கிராமம், கண்டி வீதி (ஏ9 வீதி), 1 ஆம் மற்றும் 2 ஆம் குறுக்குத்தெரு, மதவுவைத்தகுளம், மூன்றுமுறிப்பு, குட்செட்றோட், தோணிக்கல், பண்டாரிக்குளம், ஈரப்பெரியகுளம், வேரகம, கற்குண்டமடு, அலுத்கம, அழகல்ல, பகல அழுத்வத்த, புபுதுகம, குருந்துப்பிட்டிய, நெடுங்குளத்திலிருந்து பதவியா வரை, பொகவஸ்வேவ, மாமடு, CEC கல்லுடைக்கும் ஆலை, பூ-ஓயா படை முகாம், ஈரப்பெரியகுளம் படை முகாம், ஈரப்பெரியகுளம் SLBC, கார்கில்ஸ் பூட் சிற்றி, மண்டெரின் ஆடைத்தொழிற்சாலை, KOWLOOM ஆடைத் தொழிற்சாலை, குளோப் அரிசிஆலை, விமானப்படை இராணுவ முகாம் -

**மன்னார் பிரதேசத்தில்** - காலை 8 மணியில் இருந்து மாலை 5.30 மணிவரை முருங்கன் ஆகிய பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் எம். துவாரகன் அறிவித்துள்ளார்.

# பரிசளிப்பு விழா

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி ந.தேவராணி தலைமையில் இடம்பெறவுள்ள இந்த விழாவில் வடமாகாண சபை உறுப்பினர் ம.க.சிவாஜிலிங்கம் பிரதம விருந்தினராகவும் திருமதி இ.இராஜேஸ்வரி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# பொதுச் சபைக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் புதிய இயக்குநர் சபையைத் தெரிவு செய்வதற்கான பொதுச்சபைக் கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

சமாசத் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் நடைபெறும் இந்த பொதுச்சபைக் கூட்டத்தில் 150 வரையான பொதுச்சபை உறுப்பினர்கள் கலந்துகொள்வர். இந்தப் பொதுச் சபை உறுப்பினர்களால் சமாசத்தின் புதிய இயக்குநர் சபைத் தெரிவு செய்யப்படும்.



# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



124




## அத்தியாயம் - VII

## சீதன முறைமை

எனது நூலின் முற்பகுதி யாழ்ப்பாண மக்களின் மரபுவழிச் சட்டமான தேச வழமைச்சட்டத் தொகுப்பை பரிசீலனை செய்கிறது. இந்த ஆய்வு மூலமாக சீதன வழக்குமுறை தங்கி நிற்கும் சொத்துடைமை விதிகளையும் சொத்துடைமை உறவுகளையும் விளக்கியுள்ளேன். நூலின் இரண்டாவது பகுதி, சீதன வழக்கில் சம காலத்தில் புகுத்தப்பட்ட நடைமுறைகள் பற்றியும் அவை தமிழ்ப் பெண்களின் சமூக வாழ்வில் எவ்விதமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பது பற்றியும் ஆராய்கிறது. அத்தோடு, அரச ஒடுக்குமுறையும் அதனால் விளைந்த புறநிலைகளும் சீதனப் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கி, மோசமடையச் செய்துள்ளன என்பதையும் இந்தப் பகுதியில் விளக்குகின்றேன். பேச்சுத் திருமணத்தையும் நான் கண்டித்து விமர்சிக்கிறேன். இந்தத் திருமண முறை பெண்களின் சமூக வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் முட்டுக்கட்டையாக அமைந்துள்ளதுடன் சாதியத்தைப் பேணி வளர்க்கிறது என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கின்றேன். படித்துப் பட்டம் பெற்று, உயர் தொழில் புரியும் பெண்கள் கூட சீதன முறைக்கும், சமூக பாரம்பரியங்களின் மேலாதிக்கத்துக்கும் அடிபணிய வேண்டியுள்ளமையை எடுத்துக்காட்டி, சீதன முறைமையிலுள்ள இறுக்கமான வளைந்து கொடாத பண்பாட்டு ஆதிக்கமானது பெண்களின் வாழ்நிலையை நிர்ணயிக்கும் சக்தி வாய்ந்ததாக விளங்குவதாக சுட்டிக்காட்டுகிறேன். பெண்களின் வீட்டு ஊழியம் பற்றியும் அதற்கும் சீதன முறைக்கும் மத்தியிலான உறவு பற்றியும் ஆராய்கின்றேன். இறுதியாக, பெண்களின் தங்கு நிலை பற்றியும், வளர்ச்சிக்குக் குந்தகமாக நின்று பெண்களை அது முடக்கி வைத்திருக்கும் தன்மை பற்றியும் விளக்குகின்றேன். ஒரு பெரிய சமூகப் பிரச்சினையாக உருவெடுத்துள்ள சீதனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வாகப் பெண்களின் சொத்துரிமைகளை மேலும் பலப்படுத்த சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என முடிவுரையில் நான் பரிந்துரைக்கின்றேன்.

எனது நூல் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, பிரபல தமிழீழ இலக்கிய ஏடான 'வெளிச்சத்தில்' தொடர் கட்டுரையாகப் பிரசுரிக்கப்பட்டது. யாழ்ப்பாணப் பண்பாட்டு வாழ்வில், சீதனம் என்ற கோட்பாட்டுக்கு விரிவான விளக்கம் கொடுப்பதே இந்நூலை நான் எழுதியதன் நோக்கமாகும். எனது நோக்கத்தை இந்த நூல் நிறைவு செய்யுமாயின் அதுவே எனக்குப் போதும்.

ஈற்றில் பிரபாகரனின் பணிப்பின் பெயரில் விடுதலைப் புலிகளின் சட்டவாளர்கள் (நீதி, நிர்வாகப் பிரிவினர்) சீதன நடைமுறை சம்பந்தமான புதிய சட்டவிதிகளை இயற்றினர். இந்தப் புதிய சட்டங்கள், பெண்களின் சொத்துரிமையைப் பேணிப்பாதுகாத்துடன், மணமகனின் உறவினருக்கு ரொக்கப் பணமாக அன்பளிப்புக் கொடுக்கும் முறையை தடை செய்தது. மனைவியின் சொத்து மீது கணவனுக்கு மேலாண்மை வழங்கும் தேச வழமையின் விதியை நீக்கியமையை புதிய சட்டங்களின் ஒரு முக்கிய அம்சமாக அமைந்தது.

## பெண்களுக்கு எதிரான வன்முறை

1990 ஆம் ஆண்டு இந்திய அமைதிப்படைகள் யாழ்ப்பாணக் குடாநாட்டை விட்டு வெளியேறிய போது, பெரிய சமூகப் பிரச்சினைகளையும் விட்டுச் சென்றன. நீண்டகாலமாக பொருளாதாரம் வளர்ச்சி குன்றியமை, சொத்துடைமைகளுக்கு ஏற்பட்ட பெரும் அழிவு, போரால் மக்களது வாழ்வில் ஏற்பட்ட சீரழிவுகள், ஓர் அந்நிய இராணுவத்தின் ஆக்கிரமிப்பு இவையெல்லாம் யாழ்ப்பாண சமூகத்துக்கு மிகவும் சிக்கலான சமூகப் பிரச்சினைகளை உருப்பெறச் செய்தன. பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களிலும் சீர்குலைவு ஏற்பட்டுள்ளது என்பதையும் யாழ்ப்பாண மக்கள் கவலையோடு உணர்ந்திருந்தனர். சமூக ஒழுக்கத்தில் சீர்குலைவு ஏற்படாமல், மக்களின் வாழ்வில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் மாபெரும் பொறுப்பு விடுதலைப் புலிகள் மீது சுமத்தப்பட்டது. குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள விடுதலைப் புலிகளின் செயலகங்களில், சமூகப் பிரச்சினைகள் பற்றியும் குற்றச் செயல்கள் பற்றியும் பொதுமக்கள் பெருந்தொகையில் முறைப்பாடுகள் செய்தனர். யாழ்ப்பாணச் சமூகத்தின் தனித்துவமான பாராட்டத்தக்க பாரம்பரிய பண்பாக விளங்கி வந்த சமூக ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் மீண்டும் நிலைநிறுத்துமாறு பொதுமக்கள் விடுதலைப் புலிகளைக் கோரினர். இப்படியான ஒரு சூழலில், சமூகத்தில் நீண்டகாலமாக மாற்றமின்றி நிலைத்துநிற்கும் சில சமூகப் பிரச்சினைகளுக்கு முற்போக்கான தீர்வுகளை முன்வைப்பது சாத்தியமானதே. சில பிரத்தியேக சமூகப்பிரச்சினைகளைப் பொறுத்தவரை, இவை பற்றி ஆழமாக ஆய்வு செய்த பின்னரே, இவை சம்பந்தமான கொள்கைகளும் தீர்வுகளும் வகுக்கப்பட வேண்டும் என்பதே எனது கருத்தாகும்.

குறிப்பாக, பெண்கள் பெரும் சமூகப் பிரச்சினைகளை எதிர்கொண்டு நின்றார்கள். அவர்கள் எதிர்கொள்ளும் சில பிரச்சினைகளைத் தெரிவுசெய்து அவை பற்றி ஆழமான ஆய்வு செய்து அந்தப் பிரச்சினைகளின் புறத்தோற்றத்துக்கும் பின்னால், உள்ள உண்மைகளைக் கண்டுபிடித்து, அவற்றின் அடிப்படையிலே முற்போக்கான கொள்கைத் திட்டங்களை வகுக்க வேண்டும் என நான் கருதினேன். உதாரணமாக யாழ்ப்பாணத்தில் அன்று, கசிப்பு, கள்ளச்சாராயம் காய்ச்சுவது என்ற குற்றச்சாட்டில் வறுமைக்கோட்டிலிருந்த தாழ்த்தப்பட்ட சமூகப் பிரிவினரைச் சேர்ந்த ஏராளமான பெண்கள் கைது செய்யப்பட்டனர். இந்த விதமாக ஏழைப் பெண்களைக் கைது செய்து, கடும் தண்டனைகளை வழங்கினாற் போல இந்தக் குற்றச் செயல்களை ஒரேயடியாகத் தடுத்துவிட முடியாது. என்னைப் பொறுத்தவரை, இந்தப் பெண்களைக் கைதுசெய்து, சிறைகளில் தடுத்து வைத்து அல்லது குற்றப்பணம் அறவிடுவதால் இந்தச் சமூகப் பிரச்சினை தீர்வதற்கு மாறாக மேலும் மோசமடைந்து செல்லும் என்பதே எனது கருத்து. இத்தகைய பெண்கள் கைது செய்யப்படும் பொழுது, சமூகத்தில் அவர்களுக்கு குற்றவாளிகள் என்ற முத்திரை குத்தப்படுகிறது. தாய்மாரிடமிருந்து பிள்ளைகள் பிரிக்கப்பட்டு தாய்மாரின் கவனிப்பையும் கட்டுப்பாட்டையும் பிள்ளைகள் இழந்துவிட நேரிடுகிறது. இந்தச் சமூகச் சிக்கல்கள் நிச்சயமாகக் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். பெரும்பாலும் விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஊனமடைந்து வலது குறைந்த கணவனைக் கொண்ட பெண்கள் - இப்படியான பெண்கள் மீதே குடும்பத்தைக் கொண்டு நடத்தும் பொறுப்பு சுமத்தப்படுகிறது. இப்படியானவர்களே கசிப்பு, கள்ளச் சாராயம் வடிக்கிறார்கள். யாழ்ப்பாணச் சமூகப் பொருளாதார சூழலில், ஏதோ வருமானம் தேடிக் கொள்வதற்கு இந்தத் தொழிலைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை. இப்படியான பிரச்சினைகளுக்கு முற்போக்கான தீர்வு காணவேண்டுமானால் நிச்சயமாக இவை செம்மையான சமூக ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். யாழ்ப்பாண சமூகத்தில் போர் சூழல், எதிர்மறையான பெரும் சமூகப் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது என்பது உண்மையே. எனினும், ஓர் ஆக்கபூர்வமான சமூக மாற்றத்துக்கும் வழிகோல இவை வாய்ப்பளித்திருந்தன.

> யாழ்ப்பாணச் சமூகத்தின் தனித்துவமான பாராட்டத்தக்க பாரம்பரியப் பண்பாக விளங்கி வந்த சமூக ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் மீண்டும் நிலைநிறுத்துமாறு பொதுமக்கள் விடுதலைப் புலிகளைக் கோரினர்.

நான் யாழ்ப்பாணம் திரும்பியமையிலிருந்து, தமிழ்ப் பெண்கள் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினைகளை ஆராய்ந்து அறிய வேண்டுமென்ற அவாவால் உந்தப்பட்டு, முதலில் சீதனப் பிரச்சினை பற்றி ஆய்வு செய்தேன். பின்னர், வீட்டுச் சூழலில் பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறை பற்றி ஆய்வு செய்ய ஆவல் கொண்டேன். 1994 - 95 காலப்பகுதி. அப்பொழுது எத்தனையோ சமூகப் பிரச்சினைகளுக்குப் பெண்கள் முகம் கொடுத்து வந்தார்கள். இந்த வேளையில், சில தடவைகளில் பெண் போராளிகளுடன் நிகழ்ந்த கலந்துரையாடல்களின்போது, குடும்பச் சூழலில் பெண்களுக்கு எதிரான வன்முறைப் பிரச்சினை தலை தூக்கியது. இந்தப் பிரச்சினை பற்றி ஆய்வு ஒன்றை நடத்த வேண்டும் என நான் முன்வைத்த யோசனைக்கு பதிலளித்த ஒரு பெண் போராளி ''ஆண்கள் மீது வன்முறை புரியும் பெண்களும் உண்டல்லவா?'' என்று ஒரு கேள்வியை எழுப்பினார். குடும்பச் சூழலில் நிகழும் வன்முறை ஒரு சிக்கலான பிரச்சினை என்பது எனக்குத் தெரியும். பின்னராக நான் மேற்கொண்ட ஆய்வுகளின்போது, ஆண்கள் மீது பெண்கள் புரியும் வன்முறைச் சம்பவங்களில் ஒன்று அல்லது இரண்டு பெண்கள் ஈடுபட்டமையை அறிய முடிந்தது. நான் குடும்பச் சூழலில் பெண்களுக்கு எதிரான வன்முறையே எனது ஆய்வின் இலக்காகக் கொண்டேன்.

(தொடரும்...)

# உள்ளூராட்சி தேர்தல்: என்ன செய்யப் போகிறது கூட்டமைப்பு?

பி.மாணிக்கவாசகம்



உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்கள் ஜனவரியில் வரவிருக்கின்ற நிலையில், அதற்கான ஆயத்தங்களில் அரசியல் கட்சிகள் தயாராகி வருகின்றன. உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவது தொடர்பில் இருந்த இழுபறிக்கு முடிவேற்பட்டுள்ளதை அடுத்தே தேர்தலுக்கான அறிவித்தல் வெளியாக இருக்கின்றது.

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்கள், மாகாணசபைத் தேர்தல்களைப் போலவோ அல்லது பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தல்களைப் போன்றோ, ஒப்பீட்டளவில் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை எனக் கூற முடியாது.

இருந்தபோதிலும், உள்ளூராட்சிச் சபைகளிலும் அரசியல் கட்சிகளே ஆதிக்கம் செலுத்துகின்ற ஒரு போக்கே நாட்டில் நிலவுகின்றது. இதனால், அரசியல் கட்சிகள் தமது இருப்பின் மகிமையையும், தமது அரசியல் இருப்பின் பலத்தையும் பரீட்சித்துக் கொள்வதற்குரிய அடிமட்டத்திலான ஒரு பரீட்சைத் தளமாகவே இந்தத் தேர்தல்கள் திகழ்கின்றன.

யுத்தத்துக்குப் பின்னரான காலப் பகுதியில், அரசியல் கட்சிகள் மத்தியில் அரசியல் அதிகார பலத்துக்கான போட்டி நிலைமை அதிகரித் திருப்பதைக் காண முடிகின்றது. குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலேயே இந்த நிலைமை தூக்கலாகத்தோன்றுகின்றது. யுத்தகாலத்திலும், யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னரும், யுத்த வெற்றியின் மிதப்பில் ஆட்சி நடத்திய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு காலத்திலும் இருந்த கெடுபிடிகள் காரணமாக அரசியலில் ஈடுபடுவதற்குரிய ஆர்வம் சமூகத்தில் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே இருந்தது.

நல்லாட்சி அரசால் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க மாற்றங்கள், கெடுபிடிகள் நீங்கியுள்ள சூழல் என்பன பலரையும் அரசியலில் ஈடுபடத் தூண்டியிருக்கின்றன. இந்த நிலையிலேயே மாகாணசபை தேர்தல்களிலும் பார்க்க 2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் பல புது முகங்கள் பல கட்சிகளிலும் களத்தில் இறங்கியிருந்தன.

கடந்த இரண்டரை ஆண்டுகளில் அரசியல் மற்றும் சமூக செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான ஜனநாயக இடைவெளி விரிவடைந்திருக்கின்றது. இந்த நிலையில் வரப்போகின்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் முன்னெப்போதும் இல்லாதவகையில் சூடுபிடித்திருக்கும் என நிச்சயமாக எதிர்பார்க்க முடியும்.

பொது அமைப்புக்களிலும் மற்றும் சமூக மட்டத்திலான செயற்பாடுகளிலும் ஈடுபாடு கொண்ட பலரும் உள்ளூராட்சி சபைகளுக்கானதேர்தல்களில்பங்கெடுப்பதற்காக முண்டியடிப்பார்கள் என்றும் எதிர்பார்க்கலாம். உள்ளூராட்சி ச் சபைகளுக்கான தேர்தல்களில் அரசியல் கட்சிகள்பெண்களுக்குஉரிய இடமளிக்க வேண்டும் எனத் தேர்தல் சட்டவிதிகளின் மூலம் நிபந்தனை விதித்திருப்பதையடுத்து, பெண்களும் இம்முறை அதிக அளவில் களமிறங்குவதற்கான வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கின்றது.

உள்ளூராட்சி சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டும் என்பதற்காக சமூக மட்டத்தில் தொண்டு நிறுவனங்கள் பெண்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வை ஏற்கனவே ஏற்படுத்தியிருக்கின்றன. அது மட்டுமல்லாமல், பெண்கள் எவ்வாறு பொதுவாக அரசியலில் ஈடுபடலாம், குறிப்பாக உள்ளூராட்சிச் சபைகளில் எத்தகைய பங்களிப்பைச் செய்யலாம், அதற்கு அரசியல் ரீதியாக என்னென்ன விடயங்களில் எவ்வாறு கவனம் செலுத்திச் செயற்பட வேண்டும் என்பன போன்ற விடயங்களில் இந்த நிறுவனங்கள் பரவலாகப் பயிற்சிகளை வழங்கியிருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

**கூட்டமைப்பும் தமிழரசும்**

இத்தகைய பின்னணியில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை எதிர்கொள்வதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டுள்ள வடக்கு, கிழக்குப் பிரதேசங்களைச் சேர்ந்த அரசியல் கட்சிகளைத் தெரிவுசெய்வதில் தமிழரசுக் கட்சி உயர்வான ஓரிடத்தில் இருந்து செயற்படுகின்றது. தமிழ்த்தேசியகூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் என்ற பெயருக்காக ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கும் வேட்பாளர் பட்டியலில் அது இடம்கொடுத்து வருகின்றது. அவ்வாறு இட ஒதுக்கீடு செய்யும்போது, வாக்குவாதங்களும், இழுபறிகளும் நிறையவே இடம்பெறுகின்றமை வழக்கம்.

இறுதியில் தலைமைக்கட்சி என்பதற்காக மட்டுமல்லாமல், அதி காரம் வாய்ந்த கட்சிஎன்றரீதியிலும், ஏனையகட்சிகளிலும் பார்க்கத் தமிழரசுக் கட்சியே அதிக எண்ணிக்கையிலான வேட்பாளர்களைத் தேர்தல்களில் களமிறக்கி வருவதைக் காண முடிகின்றது.

பல கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு கூட்டு அமைப்பாகச் செயற்படும் போது, அந்த அமைப்பின் பங்காளிகள் என்ற ரீதியில் அனைத்துக் கட்சிகளும் சம மானவைகளாக இருப்பது அவசியம். குறிப்பாக ஒரு மோசமான யுத்தத்தில் பேரழிவைச் சந்தித்து, அந்த அழிவில் இருந்து மீள்வதற்கு அரசின் இதய சுத்தியான நடவடிக்கைகளின்றி கலங்கி நிற்கின்ற மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள், அந்த மக்களின் நன்மைக்காக ஒன்றிணைந்துள்ள போதிலும், இறுக்கமான ஒரு கட்டமைப்பின் கீழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் தொடர்ச்சியாகப் பின்னடைவையே சந்தித்து வருகின்றன.

இதற்கு அந்தக் கட்சிகள் மத்தியில், அந்த கூட்டமைப்புக்கு உள்ளே இருக்க வேண்டிய ஒன்றிணைந்த செயற்பாட்டுத் தன்மை இல்லாமையே இதற்கான முக்கிய காரணமாகும். யுத்தத்தில் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் அரசியல், சமூக நிலைமைகளுடன், அவர்களுடைய சுபிட்சமான எதிர்காலத்துக்கு அவசியமான, வாழ்வாதாரம், பொருளாதாரம், கல்வி மற்றும் முக்கிய அம்சங்களில் இந்தக் கூட்டமைப்பு தீவிர கவனம் செலுத்துவதைக் காணமுடியவில்லை. மாறாக, அந்தக் கூட்டமைப்புக்குத் தலைமையேற்றுள்ள தமிழரசுக் கட்சி மக்களுக்கான அரசியலிலும் பார்க்க தனது கட்சி அரசியல் செயற்பாடுகளிலேயே அதிக நாட்டம் கொண்டு செயற்பட்டு வருவதைக் காண முடிகின்றது.

இந்தப் போக்கு கூட்டமைப்பின் அரசியல் வலிமையைப் பலப்படுத்துவதற்குப் பதிலாக அதனைப் பலமிழக்கச் செய்வதற்கே வழிவகுத்திருக்கின்றது. சமூக ஊடகங்கள் சமூகத்துக்குள்ளே ஆழமாக வேரூன்றி பல துறைகளிலும் இளைஞர்களை மட்டுமல்லாமல் மூத்தவர்களையும் விழிப்படையச் செய்துள்ள ஒரு காலப்போக்கில் வரப்போகின்ற உள்ளூராட்சிசபைகளுக்கானதேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல்வேறு சிக்கல்களுக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளது என்பதே யதார்த்தமாகும்.

**ஒருமித்த நாடு என்ற விவகாரம்**

வரப்போகின்ற உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு,கூட்டமைப்பாகப் போட்டியிடுமா அல்லது அதன் கட்சிகள் தனித் தனியே பிரிந்து தனிக்கட்சிகளாகப் போட்டியிடப் போகின்றனவா என்பது முக்கிய கேள்வியாக எழுந்திருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியமான செயற்பாடுகளில் பங்காளிக் கட்சிகளுடன் கலந்துரையாடாமல், தலைமைக் கட்சியாகிய தமிழரசுக் கட்சி தன்னிச்சையான முடிவுகளை மேற்கொண்டு செயற்பட்டு வருகின்றது என்பது குற்றச்சாட்டாக இருந்தாலும், நடைமுறையில்அனைவரும்அதனைத் தெளிவாகக் காணமுடிகின்றது.



சவால்கள் மிகுந்ததொரு சூழலுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும் என்பதை அனுமானிக்க முடிகின்றது. குறிப்பாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு இந்த உள்ளூராட்சிச்சபைத்தேர்தலைக்கூட்டுஅமைப்பாக எதிர்கொள்ளுமா அல்லது தனித்தனி கட்சிகளாகத் தனித்துக் களமிறங்கி தேர்தலில் பங்கேற்குமா என்பது மிகப் பெரிய கேள்வியாகியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளே நிலவுகின்ற கருத்து வேற்றுமைகளும், கூட்டமைப்பை வலிமையானதோர் அரசியல் அமைப்பாகக் கட்டியெழுப்பத் தவறியிருப்பதுவும் இதற்கு முக்கிய காரணமாகக் கூறலாம். கூட்டமைப்பின் தலைமைக் கட்சியாகிய இலங்கைத் தமிழரசுக் கட்சி கூட்டமைப்புக்குள்ளே தனது செல்வாக்கை விரிவுபடுத்தி வலுப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டு வருகின்றது என்ற குற்றச்சாட்டு நீண்டகாலமாகவே முன் வைக்கப்பட்டு வருகின்றது.

தனது செல்வாக்கை அதிகரித்துக் கொள்வதன் ஊடாக, அந்தக் கட்சி மக்கள் மத்தியில் தனக்குள்ள ஆதரவைப் படிப்படியாக அதிகரித்து, இறுதியாகத் தான் மட்டுமே எஞ்சியிருப் பதற்கான ஓர் அரசியல் இலக்கை நோக்கிக் காய்களை நகர்த்தி வருகின் றது என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது நான்கு கட்சிகளைக் கொண்டதொரு கூட்டே தவிர, தனித்துவமான அரசியல் அடையாளத்தையோ அல்லது கட்டமைப்பையோ அது கொண்டிருக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது மக்கள் மத்தியிலும் சர்வதேச அளவிலும் வெறுமையானதோர் அடையாளம் என்பதற்கு அப் பால், அதற்கெனத் தனித்துவமானதொரு சிறப்பம்சம் எதனையும் அது கொண்டதல்ல.

தேர்தல்களில் போட்டியிடுகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது வெறுமையானதோர் அரசியல் போர்வையாகவே தோற்றம்கொண்டிருக்கின்றது. அந்தத் தோற்றத்தை வைத்துக் கொண்டு, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்திலேயேதமிழ்த்தேசியகூட்டமைப்பு என்ற பெயரில் அந்த கூட்டு அமைப்பில் அங்கம் வகிக்கின்ற கட்சிகள், தேர்தல்களில் போட்டியிட்டு வருகின்றன.

**மக்களுக்கான அரசியலா கட்சிக்கான அரசியலா..?**

அதிகாரபூர்வமாகப் பார்த்தால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனை வருமே இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற வரையறைக்குள்ளேயே அடங்குகின்றார்கள். அவர்கள் தங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என அழைத்துக் கொண்டாலும், சட்டரீதியாக அந்த அந்தஸ்து அவர்களுக்குக் கிடையாது என்றே கூறவேண்டும். இந்த நிலையில் தமிழரசுக் கட்சியே பலம் வாய்ந்த கட்சியாகத் திகழ்கின்றது.

தேர்தலுக்கான நடைமுறையில் அதிகார அந்தஸ்தும் பலமும் வாய்ந்ததாகத் திகழ்கின்ற ஒரே காரணத்துக்காகவே, தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்



ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கை அரசால் இணை அனுசரணை வழங்கப்பட்ட பிரேரணையில் கூறப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றுவதில் அரசு அக்கறையற்ற ஒரு போக்கில் செயற் பட்டு வருகின்ற போதிலும், அதற்கு எந்தவிதமான நிபந்தனையுமின்றி இரண்டு வருட கால அவகாசம் வழங்கிய விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையாகிய தமிழரசுக்கட்சியே தனித்து முடிவெடுத்திருந்தது.

(11 ஆம் பக்கம் பார்க்க...)

# உள்ளூராட்சி தேர்தல்: என்ன செய்யப் போகிறது கூட்டமைப்பு?

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இனப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காண்பதற்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்ற புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழி நடத்தல் குழுவில் தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தர்களான இரா. சம்பந்தனும் சுமந்திரனுமே அங்கம் வகிக்கின்றார்கள். ஆனால், அந்த வழிநடத்தல் குழுவில் இடம்பெறுகின்ற விடயங்கள் தொடர்பாகக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளுடன் பகிர்ந்து கொள்ளப்படுவதுமில்லைக் கலந்தாலோசிக்கப்படுவதுமில்லை.



ஒற்றையாட்சி முறைமை நீக்கப்பட்டு, சமஷ்டி முறையிலான ஆட்சி முறைமை உருவாக்கப்பட வேண்டும் என்பது தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் நிலைப்பாடாகும். ஆனால், எந்த வகையிலும் பிரிக்கப்பட முடியாது என்பதை நிலைநாட்டும் வகையில் ஒற்றையாட்சியை மேலும் உறுதிப்படுத்தி நிலை நிறுத்துகின்ற 'எக்கய ராஜ்ஜிய' என்ற சிங்கள சொல்லுக்கு 'ஒருமித்த நாடு' என்ற சொற்பதம் தமிழ் மக்கள் சார்பில் வழிநடத்தல் குழுவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

இது, சமஷ்டி ஆட்சி முறைக்கு மட்டுமல்லாமல், அனைத்து இனங்களையும் ஐக்கியப்படுத்துகின்ற இலங்கைக்குள் அதிகாரங்களை சம மாகப் பகிர்ந்து கொள்வதற்கும்கூட ஆப்பு வைக்கின்ற ஒரு தீர்மானமாகவே நோக்கப்படுகின்றது. தனிநாட்டுக் கோரிக்கைக்குப் பதிலாக மீளப் பெற முடியாத வகையிலான அதியுச்ச அதிகாரப் பகிர்வே இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு தீர்வைக் காண்பதற்கான வழியாகும் எனக் கூறுபவர்களே அதற்கு எதிரான ஒரு நிலைப்பாட்டுக்குத் துணை போயிருக்கின்றார்கள் என வழிநடத்தல் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அங்கம் வகிக்கின்ற தலைவர்கள் மீது குறை கூறப்படுகின்றது.

**கலந்தாலோசனை செய்யப்படுவதில்லை**

இந்த விடயம் தொடர்பில் அவர்கள் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களுடனும் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களுடனும் கலந்தாலோசிக்காமையே இதற்கு முக்கிய காரணமாகும். அது மட்டுமல்லாமல், புதிய அரசமைப்பில் தமிழ் மக்களுடைய அரசியல் நலன்கள் சார்ந்த விடயங்களை உள்ளடக்கிய அம்சங்கள் என்னென்ன உள்ளடக்கப்படவேண்டும் தொடர்பாக குறித்து இதுவரையிலும், கூட்டமைப்புக்குள் கலந்தாலோசனை செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

> நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுச் செயற்பட்டுள்ள கடந்த இரண்டரை வருடங்களாக அரசாங்கத்திற்குப் பல வழிகளிலும் ஒத்துழைத்து வருகின்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமை சாதித்துள்ள விடயங்கள் என்ன என்ற கேள்விக்கு அர்த்தமும், ஆழமும் கொண்ட பதில்களைக் காணமுடியவில்லை என்றே கூற வேண்டும்.

**அரசியல் ரீதியான பின்னடைவு**

எனவே, நல்லாட்சி அரசுக்கு அரசியல் ரீதியாகத் தார்மீக அடிப்படையில் ஆதரவளித்துச் செயற்பட்டு வருகின்ற தமிழ்த்தேசிய கூட்டமைப்பு முக்கியமான அரசியல் விடயங்களில் கூட்டமைப்புக்குள்ளேயே ஒத்திசைவான முடிவுகளை மேற்கொண்டு, அதன் அடிப்படையில் செயற்படுவதில்லை. கூட்டமைப்பின் தலைமை என்ற ரீதியில் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களான ஒருசிலரே முடிவுகளை மேற்கொண்டு செயற்பட்டுச் செல்கின்ற போக்கு கூட்டமைப்புக்குள் பிரச்சினைகளை உருவாக்கியிருக்கின்றது. இந்த நிலைமையே, உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஐக்கியத்தை கேள்விக்கு உள்ளாக்கியிருக்கின்றது.

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுச் செயற்பட்டுள்ள கடந்த இரண்டரை வருடங்களாக அரசாங்கத்திற்குப் பல வழிகளிலும் ஒத்துழைத்து வருகின்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமை சாதித்துள்ள விடயங்கள் என்ன என்ற கேள்விக்கு அர்த்தமும், ஆழமும் கொண்ட பதில்களைக் காணமுடியவில்லை என்றே கூற வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு ஒரு வருட காலத்துக்குள்ளேயே ஓர் அரசியல் தீர்வு காணப்பட்டுவிடும் என்று கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட் சித் தலைவருமாகிய இரா.சம்பந்தன் உறுதியாகக் கூறி வந்தார். ஆனால் அது நிறை வேறவில்லை. புதிய அரசமைப்பை உருவாக்கும் நடவடிக்கைகள் தாமதமாகியதனாலும், வேறு பல காரணங்களினாலும், அரசியல் தீர்வு விடயத்தில் அவர் எதிர்பார்த்த வகையில் காரியங்கள் நடைபெறவில்லை.

அது மட்டுமல்லாமல், புதிய அரசமைப்புக்கான வரைவில் உள்ளடக்கப்படுவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள அடிப்படை விடயங்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட இடைக்கால அறிக்கையும் தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் நலன்களைக் கொண்டிருப்பதற்கான அறிகுறிகளை வெளிப்படுத்தவில்லை. இவை இரண்டும், அரசியல் ரீதியான செயற்பாட்டில் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு ஏற்பட்ட மிகவும் முக்கியமான ஒரு பின்னடைவாகும்.

யுத்த மோதல்கள் தீவிரமடைந்திருந்தபோது விடுதலைப்புலிகளின் வலிமையான ஆயுதப் போராட்டம் தங்களுக்கு ஓர் அரசியல் தீர்வைக் கொண்டு வரும் என்று தமிழ் மக்கள் முழுமையாக நம்பினார்கள். அதன் காரணமாகவே விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டத்துக்குப் பல்வேறு நெருக்கடிகள், உயிரச்சுறுத்தலான நிலைமைகளுக்கு மத்தியிலும் அவர்களுக்குத் தங்களுடைய முழுமையான ஆதரவை மக்கள் வழங்கியிருந்தார்கள். அந்த நம்பிக்கை 2009 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் அரசாங்கத்தால் ஆயுத ரீதியாக தோற்கடிக்கப்பட்டதன் காரணமாக சுக்கு நூறாகச் சிதைந்து போனது.

**என்ன செய்யப் போகின்றார்கள்?**

அதன் பின்னர் தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியாக, தமிழ்த்தேசிய கூட்டமைப்பே தலைமை தாங்கியது. யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படை உரிமைகள் உடனடியாக உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும். யுத்தம் காலத்தில் பலவந்தமாக சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டு பல வருடங்களாக இடம்பெயர்ந்திருந்த அந்த மக்கள் அனைவரும் அவர்களுடைய கிராமங்களில் சொந்தக் காணிகளில் மீள்குடியேற்றப்பட்டிருக்க வேண்டும். அவர்களுடைய வாழ்வாதாரத்திற்குரிய தொழில் வசதிகள், வாழ்க்கை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். அவர்களின் அடிப்படை உரித்தான இந்த விடயங்கள் இன்னுமே முழுமையாக நிறைவேற்றப்படவில்லை.

இராணுவமும், சிங்களவர்களும் இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் காணிகளை அபகரித்திருக்கின்றமை இன்னும் தொடர்கின்றது. சிங்களவர்களாலும், இராணுவத்தினராலும் அபகரிக்கப்பட்டுள்ள அவர்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்கள் இன்னும் மீளளிக்கப்படவில்லை. தங்களுக்குச் சொந்தமான வடபகுதி கடலோரங்களில் தமிழ் மீனவர்கள் நிம்மதியாகத் தொழில் செய்து தமது வாழ்வாதாரத்தை நிலைநிறுத்த முடியவில்லை. தென்பகுதி மீனவர்களினதும் இந்திய மீனவர்களினதும் அத்து மீறிய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் இன்னும் முற்றுப் பெறவில்லை.



எனவே, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் அடிப்படைக் காணி உரிமை உள்ளிட்ட வாழ்வாதார உரிமைகளை மீட்பதிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பின்னடைவையே சந்தித்துள்ளது.

யுத்தமோதல்களின்போது இடம்பெற்றமை மட்டுமல்லாமல், அதன் பின்னரும்கூட இடம்பெற்று வருகின்ற மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்பு கூறும் விடயத்தில் ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் ஊடாக சர்வதேசம் தலையீடு செய்திருக்கின்ற போதிலும், அந்த நிலைமையை உருவாக்கியதாக அதற்கு உரிமை கோருகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையானது, பொறுப்பு கூறுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கத்தின் மீது உரிய அழுத்தங்களைப் பிரயோகிக்கவில்லை.

நிலைமாறுகால நீதிக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை. நீதி கிடைக்கும் என்பதற்கான அறி குறிகளையும் காண முடியவில்லை.

**அரசியல் கைதிகள் விவகாரம்**

காணாமல் போனவர்கள் தொடர்பில் பொறுப்பு கூறுவதற்கான நடவடிக்கைகள் இன்னும் மந்தகதியிலேயே ஊர்ந்து கொண்டிருக்கின்றன. இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் தங்களுக்கு சம்பந்தமே கிடையாது என்ற பதிலே அரசாங்கத்திடம் இருந்தும் இராணுவத்திடம் இருந்தும் வந்து கொண்டிருக்கின்றது. விடுதலைப் புலிகளின் தலைவர்களை அழித்துவிட்டதாகவும், பயங்கரவாதத்தை இல்லாமல் ஆக்கிவிட்டதாகவும் கூறுகின்ற அரசாங்கம், விடுதலைப்புலிகளுக்கு நிர்ப்பந்தம் மிக்க சூழலில் உதவி செய்தார்கள் என்பதற்காக சந்தேகத்தின் பேரில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்த அரசியல் கைதிகளை விடுதலை செய்வதில் இழுத்தடிப்பு செய்து கொண்டிருக்கின்றது. இந்த விடயத்திலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமையால் எதையுமே செய்ய முடியாத நிலைமையே காணப்படுகின்றது.

எனவே, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, உள்ளூராட்சி சபைக்கான தேர்தலை கூட்டு அமைப்பாக எதிர்கொள்ளப் போகின்றதா அல்லது உதிரிக் கட்சிகளாக எதிர்கொள்ளப் போகின்றதா என்பதற்கும் அப்பால், கூட்டமைப்பாக இருந்தாலும்சரி, தனிக்கட்சிகளாக இருந்தாலும்சரி தமிழ் மக்களுக்கு எவ்வாறான தேர்தல் வாக்குறுதிகளை அளிக்கப் போகின்றன என்பது முக்கிய கேள்வியாக உள்ளது.

அரசியல் தீர்வு காணப்போகிறோம் என கூறப்போகின்றார்களா? உள்ளூராட்சி சபைகளின் மூலம் கிராம மட்டங்களில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கப் போகின்றோம் என உறுதியளிக்கப் போகின்றார்களா? அல்லது இராணுவத்தின் வசமுள்ள காணிகளை விடுவித்துத் தருவோம். எங்களுக்கு வாக்களியுங்கள் என கேட்கப் போகின்றார்களா? அல்லது காணாமற் போயிருப்பவர்களைக் கண்டு பிடிப்பதற்கு நடவடிக்கை எடுப்போம், சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை மீட்டுத் தரு வோம், சிறைச்சாலைகளில் எஞ்சியுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்போம் என உறுதியளிக்கப் போகின்றார்களா, அல்லது சர்வதேசம் தமிழ் மக்கள் பக்கமே இன்னும் நிற்கின்றது.

நாங்கள் தமிழர்கள் ஓரணியில் ஒற்றுமையாகவே இருக்கின்றோம். ஓரணியில் திரண்டிருக்கின்றோம். உறுதியான அரசியல் தலைமையைக் கொண்டிருக்கின்றோம் என சர்வதேசத்துக்குக் காட்டுவதற்காக ஒன்றிணைந்து எங்களுக்கு வாக்களியுங்கள் எனப் பழைய பல்லவியையே புதிய மெட்டில் பாடப் போகின்றார்களா?

இவற்றில் என்ன செய்யப் போகின்றார்கள். அதனை தமிழ் மக்கள் எந்த வகையில் ஏற்றுக்கொள்ளப் போகின்றார்கள் என்பது தெரியவில்லை. ★

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா





## ஸ்பெயின், கட்டலான் சுதந்திர சட்டங்களை இடைநிறுத்தி, பிரிவினைவாதிகளுடனான மோதலை தீவிரப்படுத்துகிறது

கட்டலோனிய பிராந்திய நாடாளுமன்றம் நிறைவேற்றிய சுதந்திரத்திற்கான சட்டத்திற்கு ''நிலைமாறுவதன்'' மீது ஸ்பெயினின் அரசியலமைப்பு நீதிமன்றம் இடைக்கால தடைவிதித்தது. இது, கட்டலோனிய தேசிய தினமான அண்மையில் சுமார் ஒரு மில்லயன் பேர் பார்சிலோனாவில் பேரணி நடத்திய பின்னர், ஒக்ரோபர் 1 இல் திட்டமிடப்பட்டிருந்த கட்டலோன் சுதந்திர வாக் கெடுப்புக்கு மூன்று வாரங்களுக்கும் குறைவான நாள்களே இருக்கையில் வந்துள்ளது.

கட்டலோன் ஐரோப்பிய ஜனநாயகக் கட்சி (PdeCAT) ஆல் உருவாக்கப்பட்ட ''ஆம்'' வாக்குகளுக்காக இணைவோம் (Together for Yes) கூட்டணி, கட்டலோனிய இடது குடியரசு (ERC)மற்றும் மக்கள் ஒற்றுமையின் வேட்பாளர்கள் (Candidaturas de Unidad Popular - CUP)என இந்த நிலைமாற்றும் சட்டமானது கட்டலோன் நாடாளுமன்றத்தில் உள்ள முதலாளித்துவப் பிரிவினைவாதக் கட்சிகளால் நிறைவேற்றப்பட்டது. சர்வஜன வாக்கெடுப்பில் ''ஆம்'' வாக்குகள் வந்தால், சுதந்திர பிரகடனத்துக்குப் பின்னர் ஓர் அரசியலமைப்பு சட்டத்திற்கான அடித்தளத்தை அது அமைக்கும்.

## ஸ்பெயின் அரசு அமைப்பு முறையில் ஓர் ஆழ்ந்த நெருக்கடி வெடித்துள்ளது

கட்டலோன் சுதந்திரத்திற்கான சர்வஜன வாக்கெடுப்பாலும் மற்றும் அதைத் தடுப்பதற்கான மாட்ரிட்டின் சட்டபூர்வ மற்றும் பொலிஸ் நடவடிக்கைகளாலும், 1978 க்குப் பின்னர்



நாடாளுமன்ற ஜனநாயகமாக மாற்றப்பட்டதிலிருந்து உருவான ஸ்பெயின் அரசு அமைப்புமுறையில் ஓர் ஆழ்ந்த நெருக்கடி வெடித்துள்ளது. இது, கடந்த ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறுவதற்கு வாக்களிக்கப்பட்டதில் எடுத்துக்காட்டப்பட்ட ஐரோப்பிய ஒன்றிய உடைவுக்கு எண்ணெய் வார்க்கிறது. 2008 வோல் ஸ்ட்ரீட் பொறிவுக்குப் பின்னர் ஐரோப்பா எங்கிலும் ஆழ்ந்த சிக்கன நடவடிக்கைகள் மற்றும் பெரிய வேலை வாய்ப்பின்மையின் ஒரு தசாப்தத்திற்குப் பின்னர், ஸ்பெயினின் ஆளும் வர்க்கம் மூர்க்கமாக பிளவுபட்டுள்ளது.

1978 இற்கு முந்தைய பிரான்சிஸ்கோ பிராங்கோவின் (Francisco Franco) பாசிசவாத ஆட்சி வரையில் அதன் நீண்ட அரசியல் மரபியத்தைக் கொண்டுள்ள, பிரதம மந்திரி மானுவல் ரஹோய் இன் மக்கள் கட்சி (Partido Popular), கட்டலோன் தேசியவாதிகளுடன் ஒரு கடுமையான நிலைப்பாட்டை எடுக்கத் தீர்மானகரமாக உள்ளது. கட்டலோனியாவில் உள்ள சிக்கனத் திட்டத்திற்கு ஆதரவான அரசுகள் வழி நடத்தும் அல்லது அரசமைப்பு ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் ஆதரிக்கும், ஆம் வாக்குகளுக்காக இணைவோம் கூட்டணியின் வர்க்க குணாம்சத்தை பற்றி மக்கள் கட்சிக்கு எந்தவித பிரமையும் கிடையாது.




எவ்வாறிருப்பினும் ஐரோப்பா எங்கிலும் தீவிரமடைந்து வரும் சமூக கோபத்திற்கு மத்தியில், மக்கள் கட்சியோ, 1936-39 ஸ்பானிய உள்நாட்டு யுத்தத்தின் போது பிராங்கோ எதிர்ப்பின் மையமாக விளங்கிய ஒரு பிராந்தியத்தில், தொழிலாள வர்க்கத்தின் அரசியல் எதிர்ப்பை தூண்டிவிடக் கூடிய எந்தவொரு கவனக்குறைவான நடவடிக்கையையும் ஒரு மிகப்பெரும் அச்சுறுத்தலாக பார்க்கிறது. கட்டலோன் பிரிவினைவாதிகளுடன் ஒரு தீர்வுக்குப் பேரம்பேச வேண்டுமென்ற சர்வதேச பத்திரிகைகள் மற்றும் ஸ்பானிய ஆளும் வர்க்கத்தின் பிரிவுகளிடம் இருந்து வரும் எச்சரிக்கைகளுக்கு மத்தியிலும், மக்கள் கட்சியானது ஆக்ரோஷமான நடவடிக்கைகளைக் கொண்டு அழுத்தமளிக்கின்ற நிலையில், இது அரசு இயந்திரத்திற்குள் ஆயுத மோதல்களைத் தூண்டிவிட அச்சுறுத்துகின்றது.

மக்கள் கட்சியின் பிரிவுகள் இப்போது அரசமைப்பின் 155 ஆவது சரத்தைக் கையிலெடுக்க முன்மொழிகின்றன. அது கட்டலோன் அரசை இடை நீக்கம் செய்து, மாட்ரிட்டின் நேரடி ஆட்சியைத் திணிக்கும். அண்மையில், மக்கள் கட்சி நாடாளுமன்ற குழு செய்தி தொடர்பாளர் Rafael Hemando சுட்டிக்காட்டுகையில், சரத்து 155 ''எப்போதும் மேசையில் வைக்கப்பட்டுள்ள ஓர் அரசமைப்பு வழிவகையாகும்'' என்றார். நீதித்துறை அமைச்சர் Rafael Catala அது பயன் படுத்தத்தக்க ஒரு கருவி தான்'' என்றார்.

## அரசு தலைமை வழக்கறிஞர் Jose Manuel Maza சர்வஜன வாக்கெடுப்புக்கு ஆதரவு தெரிவித்துள்ள 712 நகர முதல்வர்களை விசாரிக்குமாறு கட்டலோன் மாகாண நான்கு தலைமை வழக்குத்தொடுநர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.


அரசு தலைமை வழக்கறிஞர் Jose Manuel Maza சர்வஜன வாக்கெடுப்புக்கு ஆதரவு தெரிவித்துள்ள 712 நகர முதல்வர்களை விசாரிக்குமாறு கட்டலோன் மாகாண நான்கு தலைமை வழக்குத்தொடுநர்களுக்கு உத்தரவிட்டுள்ளார். இது கட்டலோனியாவின் மொத்த நகர முதல்வர்களில் முக்கால் வாசி எண்ணிக்கையாகும். அவர்கள் வழக்குத்தொடுநர்களின் அலுவலகத்திற்கு சுயமாக தாமே வராவிட்டால், அவர்களைக் கைது செய்ய பொலிஸுகு உத்தரவிடப்பட்டுள்ளதாக Maza எச்சரித்தார். மக்கள் ஒற்றுமையின் வேட்பாளர்கள் (CUP) நீதிமன்றத்தை புறக்கணிக்குமாறு அதன் நகர முதல்வர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

''வாக்குப்பெட்டிகள், அச்சடிக்கப்பட்ட பொருள்கள் மற்றும் கணினி சாதனங்கள்'' என இந்த ''சட்டவிரோத சுய-நிர்ணய சர்வஜன வாக்கெடுப்பை'' நடத்துவதற்கோ அல்லது அதற்கான தயாரிப்புச் செய்வதற்கோ உதவும் எந்த பொருளையும் பறிமுதல் செய்யுமாறு அரசு வழக்கறிஞர்கள் தேசிய பொலிஸ், துணை இராணுவ ஊர்க் காவல் படை கள் மற்றும் கட்டலோன் பிராந்திய பொலிஸ் ஆகியவற்றிற்கு உத்தரவிட்டுள்ளனர்.

இந்த சர்வஜன வாக்கெடுப்புக்கு ஆதரவான கூட்டங்களும் இலக்கில் வைக்கப்பட்டுள்ளன. செப்ரெம்பர் 17 இல் மாட்ரிட்டில் ''முடிவெடுக்கும் உரிமையை ஆதரிக்கும் மாட்ரிட் குடிவாசிகள்'' (Mardrilenos por el a Decidor) அமைப்பால் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு கூட்டமும் அதில் உள்ளடங்கும். அதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. அரசமைப்பு நீதிமன்றத்தின் தீர்மானங்கள் மற்றும் அரசியலமைப்பிற்கு பகிரங்கமாகவே எதிராக உள்ள ஒரு நிகழ்வை நகராட்சிக்குள் நடத்துவது சாத்தியமில்லை. ஏற்கனவே, கூறப்பட்டுள்ளதைப் போல, சட்டத்தை பேணுவது கடமையாகும் என்று அதற்குரிய நீதிபதி கூறினார்.

மாட்ரிட்டின் அச்சுறுத்தல்களுக்கு இடையிலும், கட்டலோன் பிரிவினைவாதிகள் சர்வஜன வாக்கெடுப்புக்கு அழுத்தமளித்து வருகின்றனர். இது விரைவிலேயே கட்டுப்பாட்டை இழந்துவிடக்கூடிய ஒரு மோதலில் ஸ்பானிய மற்றும் கட்டலோன் முதலாளித்துவ வர்க்கத்தினது ஒரு மோதல் போக்கிற்கு களம் அமைத்து வருகிறது.

பிரதமர் Carles Puigdemont (PDeCAT) இன் கீழ் கட்டலோன் பிராந்திய அரசு பின்வாங்க மறுக்கிறது. ''நீதிமன்ற வழக்குகள் மற்றும் அச்சுறுத்தல்



களுக்கு முகங்கொடுத்தாலும்'' சர்வஜன வாக்கெடுப்பை நடத்த ''முன்பினும் அதிக தீர்மானகரமாக உள்ளதாக'' அது குறிப்பிடுகிறது. ஹலோ புதிய நாடு ''ஹலோ குடியரசு'', ''ஹலோ ஐரோப்பா'', ஹலோ உலகம்'' என்ற கோஷங்களின் கீழ் அண்மையில் பிரசாரம் தொடங்கப்பட்டது. பிரச்சார நடவடிக்கைகளின் போது பிராந்திய நாடாளுமன்றத்தை இடைநிறுத்துமாறு சபாநாயகர் Came Forca dell (ERC) இற்கு பிரிவினைவாத கட்சிகள் மனு அனுப்பியுள்ளன.




(கேள்வி தொடரும்)

# வவுனியா வழக்கை அ'புரத்துக்கு மாற்றுவதில் ஏதோ ஒரு சூழ்ச்சித்திட்டம் பொதிந்துள்ளது

## வடக்கு மாகாண சபைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் சந்தேகம்

யாழ்ப்பாணம், ஒக். 13

''சாட்சிகளுக்காக வழக்கை இடம்மாற்றுவது என்று கூறுவது ஏற்புடைதன்று. அதில் ஏதோ ஓர் உள்நோக்கம் புதைந்திருப்பதாகவே தோன்றுகிறது.''

- இவ்வாறு கருத்துக் கூறினார் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ. கே.சிவஞானம்.

அரசியல் கைதிகள் விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:-

வழக்கமான ஒரு வழக்கை இரண்டு காரணங்களின் அடிப்படையில் இடம் மாற்றலாம்.

ஒன்று - குற்றம் சுமத்தப்பட்டவரின் கோரிக்கையின் பேரில்.

இரண்டு - பொலிஸாரின் வேண்டுகோளின் பேரில்.

இங்கு இந்த இரண்டும் நடக்கவில்லை. சாட்சிகள் பயப்படுகின்றார்கள் என்று காரணம் காட்டி வழக்கு இடம் மாற்றப்படுகின்றது.

சாட்சிகள் பயப்படுகின்றார்கள் என்று காரணம் காட்டி வழக்குகளை இடம் மாற்றுவது என்றால் பல வழக்குகளை இடம் மாற்ற வேண்டி நேரும்.

சாட்சிகள் அஞ்சினால் அவர்களுக்கு பாதுகாப்புக் கொடுப்பது பற்றித்தான் சிந்திக்க வேண்டுமே தவிர, வழக்கை இடம் மாற்றுவது அதற்கு வழி அல்ல.



இப்படி வழக்கை இடம் மாற்றும் எத்தனத்துக்குப் பின்னால் ஏதோ ஒரு சூட்சுமம் பொதிந்திருக்கின்றது என நான் கருதுகிறேன்.

வவுனியா மேல் நீதிமன்றத்தில் உள்ள வழக்கை அநுராதபுரம் மேல்நீதிமன்றுக்கு மாற்றுவது என்பது ஏதோ ஒரு நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் நடப்பது போலவே தோற்றுகின்றது.

சாட்சிகளுக்காக வழக்கை இடம் மாற்றுவது என்ற காரணம் சப்பாத்துக்கு அளவாகக் காலை வெட்டுவது போன்றதாகும். - என்றார் சி.வீ.கே.சிவஞானம். (உ)

# பூரண கதவடைப்புப் போராட்டத்திற்கு ஆதரவு; வெகுஜனப் போராட்ட ஒருங்கமைப்புக் குழு!

வவுனியா, ஒக். 13

அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளின் கோரிக்கை நிறைவேற்றல் என்பவற்றை வலியுறுத்தி இன்று நடைபெறும் பூரண கதவடைப்புக்கு வவுனியா வெகுஜன போராட்ட ஒருங்கமைப்புக் குழு முழுமையான ஆதரவை வழங்குவதாக தெரிவித்துள்ளது.

அத்துடன், வவுனியா மாவட்ட வர்த்தக சங்கம், முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கம், தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம், தனியார் துறையினர், ஆசிரியர் சமூகம், அரச ஊழியர் சங்கம் என்பவற்றின் ஒத்துழைப்புக்களையும் கோரியுள்ளது.

யுத்தம் முடிவடைந்து தற்போது 8 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் அரசியல் கைதிகள் பலர் எந்தவித விசாரணைகளும் இன்றி நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியும், வவுனியா மேல் நீதிமன்றில் மூன்று அரசியல் கைதிகளுக்கு எதிராக உள்ள வழக்கை அனுராதபுரம் மேல் நீதிமன்றுக்கு மாற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பூரண கதவடைப்பு போராட்டத்திற்கு 20 இற்கும் மேற்பட்ட பொது அமைப்புக்கள் இணைந்து அழைப்பு விடுத்துள்ளன.

இதேவேளை, அனுராதபுரம் சிறைச்சாலையில் 17ஆவது நாளாக உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் அரசியல் கைதிகள் மூவரின் நிலைமையும் மோசமாக பாதிப்படைந்துள்ளது.

அவர்களின் நிலையை கருத்தில் கொண்டு உடனடியாக அரசு அவர்களது கோரிக்கைக்கு நியாயமான தீர்வை வழங்க வலியுறுத்தி வவுனியா மாவட்ட மக்களும், பொது அமைப்புக்களும் பூரண கதவடைப்புக்கு ஆதரவு வழங்குகின்றோம் என வவுனியா வெகுஜன போராட்ட ஒருங்கமைப்புக் குழு தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்த கதவடைப்பு போராட்டத்திற்கு வவுனியா வர்த்தக சமூகத்தையும், தனியார் பஸ் மற்றும் முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தையும் ஆதரவு வழங்குமாறும் கோரி நிற்கின்றோம் என தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# விபத்தில் சிக்கி, நிறுத்தப்பட்டிருந்த பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் மோதி ஒருவர் பலி!





கொழும்பு, ஒக். 13

ஏ9 வீதி ஆனையிறவு உமையாள்புரம் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தப்பகுதியில் ஏற்கனவே நேற்று முன்தினம் சொகுசுப் பஸ் ஒன்று விபத்திற்கு உள்ளானது.

இந்த நிலையில் விபத்திற்குள்ளான பஸ் அவ்விடத்தில் இருந்து அகற்றப்படாத நிலையில் நேற்று அதிகாலை அந்த பஸ்ஸுடன் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இந்த பகுதியில் நித்திரை காரணமாக மோதுண்ட சொகுசு பஸ் விபத்தில் இருவருக்கு சிறிய காயங்களுக்கு உள்ளாகினர்.

இந்த நிலையில் விபத்தில் சிக்கியிருந்த பஸ் அகற்றப்படவில்லை.

இதனைத்தொடர்ந்து இதே பகுதியில் அகற்றப்படாமல் இருந்த அந்த பஸ்ஸுடன் மோதுண்டு மோட்டார்சைக்கிளில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வீதி போக்குவரத்து பொலிஸார் பொறுப்புடன் செயற்படாதிருக்காமை காரணமாக ஒரே இடத்தில் தொடர்ச்சியாக இரு விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன என மக்கள் தெரிவிக்கின்றனர்.

# இன்றைய கதவடைப்புப் போராட்டத்தில் கூட்டமைப்பின் கிளிநொச்சி கிளையும்!

கிளிநொச்சி, ஒக். 13

இன்று முன்னெடுக்கப்பட்டுள்ள கதவடைப்புப் போராட்டத்திற்கு அனைத்து சமூகங்களையும் ஒத்துழைக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்டக் கிளை கேட்டுள்ளது.

அனுராதபுரம் சிறையில் உணவுத்தவிர்ப்பில் ஈடுபட்டு வரும் தமிழ் அரசியல் கைதிகளின் நியாயமான கோரிக்கையை ஏற்று அவர்களின் வழக்குகளை அனுராதபுரத்திலிருந்து வவுனியாவிற்கு மாற்றுமாறும், பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்கப்பட வேண்டும் எனவும் கோரி தொடர் கவனயீர்ப்புப் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில், தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கைக்கு ஆதரவு அளித்து முழுமையான கதவடைப்பு மேற்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பூரண கதவடைப்பிற்கு சகல தரப்பினரையும் இதற்கு ஆதரவு தெரிவிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகமான அறிவகத்தின் ஊடாக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க)

# தேர்தல் திருத்தச் சட்டத்தில் சபாநாயகர் கையொப்பம்!

உள்ளூராட்சி தேர்தல் குறித்த மூன்று திருத்தச் சட்டங்களில் சபாநாயகர் கருஜயசூரிய நேற்றுமுன்தினம் கையெழுத்திட்டார்.

மாநகரசபை, உள்ளூராட்சி சபை மற்றும் பிரதேச சபைகள் குறித்த திருத்தச் சட்டங்கள் கடந்த 9 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டன.

இதற்கான பிரேரணைகளை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஃபைசர் முஸ்தபா சபையில் கையளித்திருந்தார்.

சபாநாயகரால் கையெழுத்திடப்பட்டுள்ள இந்தத் திருத்தச் சட்டங்கள் அடுத்த வாரமளவில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வாய்ப்புகள் உள்ளன.

# சீரற்ற காலநிலை காரணமாக இரு அமைச்சர்கள் பாதிப்பு!

இலங்கையில் நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக பிரதான இரு அமைச்சர்கள் பாதிப்படைந்துள்ளனர் என தகவல் வெளியாகி உள்ளது.

திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த மீன்பிடி அமைச்சர் மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் திலிப் வெதஆராச்சி ஆகியோரே பாதிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலையில் பெய்து வரும் அடைமழை காரணமாக அவர்கள் இருவரும் கொழும்பு நோக்கிச் செல்ல முடியாத நிலையில், இரு நாள்களாக அங்கேயே தங்கியிருக்கின்றனர் என அந்த அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொள்வதற்காக கடந்த செவ்வாய்க்கிழமை இந்த குழுவினர் விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டரில் அங்கு சென்றுள்ளனர்.

இந்த நிகழ்வு முடிவடைந்த பின்னர் மீண்டும் கொழும்பிற்கு வருவதற்கு முயற்சித்துள்ளனர்.

எனினும் கடுமையான மழை காரணமாக ஹெலிக்கொப்டரில் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என விமான படை அதிகாரி தெரிவித்துள்ளார்.

வாகனங்கள் இல்லாமையினால் வெளியே வரமுடியாமல் உள்ள இந்த குழுவினர் நேற்று முன்தினம் மாலைவரையில் திருகோணமலை விமான படைமுகாமில் தங்கியிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# சபாநாயகரை மிரட்டும் வகையில் பேசினாராம்! தினகரன் மீது அ.தி.மு.கவினர் வழக்குத் தாக்கல்

அரக்கோணம்,ஒக்.13

சபாநாயகர் தனபாலை மிரட்டும் வகையில் பேசினார் என டி.டி.வி. தினகரன் மீது அரக்கோணம் பொலிஸ் நிலையத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



அ.திமு.க. எடப்பாடி பழனிச்சாமி, பன்னீர்செல்வம் தலைமையில் ஒரு அணியாகவும், தினகரன் தலைமையில் ஒரு அணியாகவும் செயற்பட்டு வருகின்றது. தினகரனுக்கு ஆதரவு தெரிவித்த 18 எம்.எல்.ஏக்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையில் டி.டி.வி.தினகரன், முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, சபாநாயகர் தனபால் மற்றும் அ.தி.மு.க. அமைச்சர்களை கண்டித்துப் பேசி வருகிறார்.

இந்தநிலையில்சபாநாயகரை மிரட்டும் வகையில் பேசுகின்றார் என டி.டி.வி. தினகரன் மீது அரக்கோணம் பொலிஸில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வேலூர் மாவட்டம் அரக்கோணம் நகர பொலிஸ் நிலையத்தில் நகர எம்.ஜி.ஆர்.இளைஞர் அணி செயலாளர் கே.பி. பாண்டுரங்கன், அ.தி.மு.க. பிரமுகர் ஏ.எல்.நாகராஜன் ஆகியோர் தனித்தனியாக வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

அந்த மனுவில் கூறியவை வருமாறு:-

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவால் அ.தி.மு.க கட்சியில் இருந்து நீக்கப்பட்ட டி.டி.வி.தினகரன் தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, சபாநாயகர் தனபால் ஆகியோருக்கு மிரட்டல் விடுக்கும் வகையில் பேசி வருகின்றார்.

இது கட்சியில் உள்ள நிர்வாகிகளிடையே மிகுந்த மன உளைச்சலையும், பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. எனவே தமிழகத்தில் சிறப்பாக ஆட்சி செய்து வரும் முதலமைச்சரையும், சபாநாயகரையும் அவதூறாகப் பேசி வரும் டி.டி.வி.தினகரன் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

(ப)

## டில்லியில் மோடியை சந்தித்த ஓ.பி.எஸ்.

புதுடில்லி,ஒக்.13

தமிழகத்தில் துணை முதல்வராகப் பதவி வகித்து வரும் ஓ.பன்னீர்செல்வம் நேற்று டில்லியில்பிரதமர்அலுவலகத்தில் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேசினார்.

தமிழக துணை முதல்வர் ஓ.பி.எஸ். நேற்று முன்தினம் தனது ஆதரவாளர்களுடன் டில்லி சென்றார். அங்கு பிரதமர் மோடியை சந்திக்க உள்ளேன் எனத் தெரிவித்திருந்தார். ஓ.பி.எஸ். உடன் அவரது ஆதரவாளர்கள் மைத்ரேயன், கே.பி.முனுசாமி ஆகியோர் உடன் சென்றிருந்தனர்.

ஏற்கனவே கடந்த 6 ஆம் திகதியன்று டில்லி சென்ற ஓ.பி.எஸ். பிரதமரை சந்திக்க நேரம் கேட்டிருந்தார். அப்போது மோடி பல்வேறு நிகழ்ச்சிகளில் மோடி பங்கேற்க சென்றமையால்மோடியைஅவரைச் சந்திக்க முடியவில்லை.

இந்த நிலையில், துணை முதல்வர் ஓ.பி.எஸ் டில்லியில் உள்ள பிரதமர் அலுவலகத்துக்கு நேற்று காலை சென்றார். அங்கு அவர் பிரதமர்நரேந்திரமோடியை சந்தித்தார். அப்போது தமிழக பிரச்சினைகள் குறித்துப் பேசினார்.

அ.தி.மு.க.வின் சின்னம் குறித்த விசாரணை தேர்தல் ஆணையத்தில் உள்ள நிலையில், ஓ.பி.எஸ்ஸின் டில்லி பயணம் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

ஓ.பன்னீர்செல்வம் துணை முதல்வராக பதவியேற்ற பின்னர் முதல் முறையாக பிரதமர்மோடியை சந்தித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ப)

## கிராமங்களின் முன்னேற்றத்திற்கு சாதிப் பாகுபாடு தடையாக உள்ளது


நரேந்திர மோடி

டில்லியில் நடைபெற்ற ஒரு விழாவில் கலந்து கொண்டு பேசிய பிரதமர் மோடி, நம் நாட்டின் கிராமங்களின் முன்னேற்றத்துக்குதடையாகஇருப்பது சாதி பாகுபாடு தான், என்று தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் சமூக சீர்திருத்தவாதி நானாஜி தேஸ்முக்கின் பிறந்தநாள் நூற்றாண்டு விழா, சமூக நல தலைவர் ஜெய்பிரகாஷ் நாராயணனின் 115 ஆவது பிறந்தநாள் விழா நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் பிரதமர் நரேந்திர மோடி கலந்துகொண்டார். அப்போது அவர் கூறியவை வருமாறு:-

நம் நாட்டின் கிராமங்களின் முன்னேற்றத்துக்கு தடையாக இருப்பது சாதிப் பாகுபாடு தான். இது தான் விஷமாகப் பரவி கிராமங்களின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக உள்ளது. இதனை களைந்து ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சியை மேம்பாடு அடையச் செய்வது தற்போது மிகவும் அவசியமாகும்.

கிராம முன்னேற்றத்திற்கு மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. நகரங்களில் ஏற்படுத்தப்படும் அனைத்து வளர்ச்சி திட்டங்களும் கிராமப்புற பகுதிகளையும் சென்றடைய வேண்டும். இதற்காக நாம் ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

அதன்பின்னர் அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தகண்காட்சியில்வைக்கப்பட்டிருந்த கண்டுபிடிப்புகளையும், பொருள்களையும் மோடி பார்வையிட்டார்.

## இந்தியாவில் எடைக் குறைவுடன் 9 கோடி 70 லட்சம் குழந்தைகள்



பிரபல மருத்துவ இதழ் வெளியிட்ட ஆய்வறிக்கையில், 2016ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி இந்தியாவில் 9 கோடி 70 லட்சம் குழந்தைகள் எடைக்குறைவாக உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் கடந்த ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் 97 மில்லியன் குழந்தைகள் உடல் எடைக் குறைவாகஉள்ளனஎனத்தெரியவந்துள்ளது. உலக சுகாதார அமைப்பு மற்றும் லண்டனில் உள்ள இம்பீரியல் கல்லூரி நடத்திய இந்த கணக்கெடுப்பில் உலகிலேயே இந்தியாவில் தான் அதிகமான குழந்தைகள் எடைக்குறைவாக உள்ளதாக தெரிவித்துள்ளனர். உணவு முறைகளில் ஏற்பட்ட மாறுபாடு இதற்கு காரணம் எனவும் தெரிவித்துள்ளனர்.

வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைபாடு அதிக அளவில் உள்ளது. இதனால் அவர்களின் உடல் எடை குறைவாக உள்ளது.

இதில் 22.7 சதவீதம் ஆண் குழந்தைகள் மற்றும் 22.7 சதவீதம் பேர் பெண்குழந்தைகள் ஆவர். உலக அளவில் 9 கோடி 70 லட்சம் குழந்தைகள் எடைக் குறைவாக உள்ளன. இந்த நிலைமை நீடித்தால் 2022ஆம் ஆண்டில் மேலும் அதிக அளவிலான குழந்தைகள் எடைக் குறைபாட்டால் பாதிக்கப்படுவர் என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

அதனால் குழந்தைகளுக்கு சத்தான உணவு வழங்க வேண்டும். ஏழை குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கு ஊட்டச்சத்தான உணவு கொடுக்கப்பட வேண்டும். இதற்கென தனி விதிமுறைகளை அமைத்து குழந்தைகளுக்கு சுகாதாரமற்ற உணவு கொடுக்கப்படுவதை தவிர்க்க வேண்டும் என லண்டன் கல்லூரி பேராசிரியர் மஜ்ஜித் இசாட்டி தெரிவித்துள்ளார்.

## விடுப்புக் காலம் முடிந்து சிறை திரும்பிய சசி



சென்னை,ஒக்.13

விடுப்பு (பரோல்) காலம் முடிந்ததையடுத்து சசிகலா நேற்று சென்னையில் இருந்து பெங்களூர் சிறைச்சாலைக்கு புறப்பட்டுச் சென்றார். அவரை உறவினர்கள் கண்ணீர் மல்க விடைகொடுத்து வழியனுப்பி வைத்தனர்.

ஜெயலலிதாவின் தோழி சசிகலா, சொத்துக் குவிப்பு வழக்கில் 4 ஆண்டுகள் தண்டனை பெற்றமையைத் தொடர்ந்து கடந்த பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி பெங்களூரில் உள்ள பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பட்டார். உடல் நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் கணவர் நடராஜனை அருகில் இருந்து கவனிப்பதற்காக, சசிகலாவுக்கு சிறை நிர்வாகம் 5 நாள்கள் தற்காலிக விடுப்பு கொடுத்தது.

இதையடுத்து கடந்த 6ஆம் திகதி பெங்களூரில் இருந்து சென்னை வந்த அவர், தியாகராய நகரில் உள்ள தனது அண்ணன் மகள் கிருஷ்ண பிரியா வீட்டில் தங்கியிருந்தார். 7ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் 11 ஆம் திகதி வரை அவர் தினமும் பெரும்பாக்கத்தில் உள்ள மருத்துவமனைக்கு சென்று கணவர் நடராஜனை பார்த்து வந்தார்.

சசிகலா விடுப்பில் இருக்கும் 5 நாள்களும் எந்தவித அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடாது, ஊடகங்களுக்கு பேட்டி கொடுக்கக் கூடாது என்பன போன்றவை உட்பட 18 நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தன. இதனால் அ.தி.மு.க. அமைச்சர்கள், எம்.எல். ஏக்கள், நிர்வாகிகள் யாரும் அவரை சந்திக்கவில்லை.

5 நாள்களும் அவர் தனது குடும்ப உறுப்பினர்களை மட்டுமே சந்தித்து மனம் விட்டுப் பேசினார்கள். அவர் வேறு எந்த நடவடிக்கைகளிலாவது ஈடுபடுகிறாரா? என்று மத்திய-மாநில உளவுத் துறையினர் இரகசியமாக கண்காணித்தனர். இதனால் சசிகலாவின் சென்னை வருகை குறுகிய வட்டத்துக்குள்ளேயே இருந்தது.

இந்த நிலையில் சசிகலாவுக்கு பெங்களூர் சிறை நிர்வாகம் வழங்கிய 5 நாள் விடுப்பு நேற்று முன்தினம் இரவு 12 மணியுடன் முடிந்தது. இதையடுத்து அவர் மீண்டும் சிறை செல்லும் நடவடிக்கைகள் தொடங்கின. நேற்று காலை 9 மணிக்கு சசிகலா ரி.நகர் வீட்டில் இருந்து பெங்களூருக்குப் புறப்பட்டார்.

(ப)

# வியட்நாமில் பொழியும் கனமழை வெள்ளத்தில் சிக்கி 37 பேர் சாவு






ஹனோய்,ஒக்.13

வியட்நாமில் கடந்த சில நாள்களாக பெய்து வரும் கனமழையால் ஏற்பட்டனர் என வெள்ளப் பெருக்கில் சிக்கி 37 பேர் உயிரிழந்துள்ளதாக அந் நாட்டு அரசு தெரிவித் துள்ளது.

தென்கிழக்கு ஆசிய நாடான வியட்நாமில் கடந்த சில நாள்களாக கடுமையாக மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக அந்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வெள்ளப் பெருக்காக காணப்படுகின்றது. வெள்ளம் ஏற்பட்டுள்ள பகுதிகளில் வசிப்பவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத் தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், மழை மற்றும் வெள்ளச் சேதம் தொடர்பாக அந்நாட்டின் பேரிடர் மையம் அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில், வெள்ளத்தில் சிக்கி 37 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோயன் மாகாணத்தில் இரண்டு குழந்தைகள் உட்பட 8 பேரும், யென் பாய் உள்ளிட்ட பிற மாகாணங்களில் 7 பேரும் உயிரிழந்துள் ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் மாயமாகியுள்ள 8 பேரை மீட்புக் குழுவினர் தேடி வருகின்றனர். வெள்ளம் பாதித்த இடங்களில் மீட்புப்பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருவதாக பேரிடர் மையம் தெரிவித்துள்ளது.

## கட்டலோனியாவின் தனிநாடு கோரிக்கை ஐந்து நாள் கெடு



ஸ்பெயின் பிரதமர்

ஸ்பெயினில் இருந்து பிரிவது தொடர்பாக ஐந்து நாள்களுக்குள் முடிவெடுக்குமாறு கட்டலோனியாதலைவருக்குஸ்பெயின் பிரதமர் கால அவகாசம் கொடுத்துள்ளார்.

ஸ்பெயினின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் மாகாணமான கட்டலோனியா விளங்குகின்றது. தனி நாடகப் பிரிவது தொடர்பான வாக்கெடுப்பு கடந்த முதலாம் திகதி நடத்தியது. இந்த வாக்கெடுப்பில் பங்கேற்ற 2.3 மில்லியன் மக்களில் 90 வீதம் பேர் தனிநாடாக கட்டலோனியா பிரிவதற்கு ஆதரவு தெரிவித்தனர். இதையடுத்து தனிநாடாக பிரிவது உறுதி என கட்டலோனியா தலைவர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில், தனி நாடாக பிரிவது குறித்து பரிசீலனை செய்து ஐந்து நாள்களுக்குள் முடிவை அறிவிக்குமாறு ஸ்பெயின் பிரதமர் மரியானோ ரஜாய் கூறியுள்ளார். வருகிற 19ஆம் திகதி மு.ப. 10 மணிக்குள் அவர் தனது முடிவை தெரிவிக்கவேண்டும், என ஸ்பெயின் பிரதமர் மரியானோ தெரிவித் துள்ளார்.

## ஈராக் உணவு விடுதியில் தற்கொலைத் தாக்குதல்

### 11 பேர் சாவு



பாக்தாத்,ஒக்.13

மேற்கு ஈராக் பகுதியின் ஹிட் நகரில் உள்ள உணவு விடுதியில் தற்கொலைப்படை தீவிரவாதி ஒருவர் நடத்திய தாக்குதலில் 11 பேர் சாவடைந்துள்ளனர்.

ஈராக் நாட்டின் மேற்கு பகுதியில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கும், ஈராக் இராணுவத்தினருக்கும் இடையே அடிக்கடி சண்டை நடைபெற்று வருகிறது. இந்தச் சண்டை நடைபெற்று வரும் இடத்தில் இருந்து சுமார் 160 கிலோமீற்றர் தொலைவில் ஹிட் என்ற நகரம் அமைந்துள்ளது.

இந்த நிலையில், ஹிட் நகரில் உள்ள உணவு விடுதியில் நுழைந்த தற்கொலைப்படை தீவிரவாதி தன் உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்தான். இந்த தாக்குதலில் 11 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். மேலும் சுமார் 15 பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தத் தாக்குதலில் பலியானவர்கள் அனைவரும் பொதுமக்கள் என இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தாக்குதலையடுத்து அப் பகுதியில் பாதுகாப்பு பலப் படுத்தப்பட்டுள்ளது.

## உடல் பருமன் நோயால் 12 கோடி பேர் பாதிப்பு



உலகம் முழுவதும் 12 கோடியே 40 லட்சம் பேர் உடல் பருமன் நோயால் அவதிப்படுகின்றனர் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

இந்த நிலையில் உடல் பருமன் தின விழாவை யொட்டி 'லாண்செட்' நிறுவனம் உலகம் முழுவதும் 200 நாடுகளில் இது குறித்து கணக்கெடுப்பு நடத்தியது. அதில் 12 கோடியே 40 லட்சம் பேர் உடல் பருமன் நோயால் அவதிப்படுகின்றனர் என தெரிய வந்துள்ளது.

இவர்களில் அதிகமானோர் குழந்தைகள் மற்றும் கட்டிளமைப் பருவ இளைஞர் மற்றும் யுவதிகள் ஆவர். ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்தவரை இங்கிலாந்தில் தான் அதிக அளவில் உடல் பருமன் நபர்கள் உள்ளனர். சமீப காலமாக சீனா, இந்தியா உள்ளிட்ட கிழக்கு ஆசிய நாடுகளில் உடல் பருமனால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. அவர்களில் 5 முதல் 9 வயது வரை உள்ள சிறுவர் சிறுமிகளில் 10 பேரில் ஒருவர் உடல் பருமனால் அவதிப்படுகிறார். மிகக் குறைந்த விலையில் கிடைக்கும் கொழுப்புச் சத்து நிறைந்த தின்பண்டங்கள் மற்றும் உணவு வகைகளால் தான் உடல் பருமன் ஏற்படுகின்றது என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

(க)

## அமெரிக்காவுக்கு போர் மூலம் பதிலடி என மிரட்டல் விடுக்கும் வடகொரியா



சியோல்,ஒக்.13

வடகொரியா பகுதிகளில் அமெரிக்க இராணுவ விமானங்கள் ஒத்திகையில் ஈடுபட்டதைத் தொடர்ந்து அமெரிக்காவுக்கு போர் மூலம் பதிலடி கொடுப்போம் என வடகொரியா மிரட்டல் விடுத்துள்ளது.

அமெரிக்காவை தாக்குவதற்கு தயாராகி வருகின்றோம் என வடகொரியா ஏற்கனவே அறிவித்தது. இதனால் கோபம் அடைந்த அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் ஐ.நா. சபையில், வடகொரியாவைக் கடுமையாக எச்சரித்தார். அந்நாட்டையே அழித்து விடுவோம் என்றும் கூறினார்.

இந்த நிலையில் அமெரிக்கா தற்போது கொரிய தீபகற்பப் பகுதியில் போர் ஒத்திகையில் ஈடுபட்டுள்ளது. அமெரிக்க இராணுவ விமானங்கள் வடகொரியாவை ஒட்டி உள்ள பகுதிகளில் பறந்து சென்று ஒத்திகையில் ஈடுபட்டுள்ளன. இது, வடகொரியாவுக்கு கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது சம்பந்தமாக வடகொரிய வெளியுறவு மந்திரி ரியாங்கோ கூறியவை வருமாறு:-

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் ஏற்கனவே வடகொரியாவை கடுமையாக மிரட்டி உள்ளார். நாங்கள் வார்த்தைக்கு வார்த்தை அவருக்கு பதில் சொல்ல விரும்பவில்லை. நாங்கள் எங்கள் பதிலடியை போர் மூலம் அவர்களுக்கு காட்டுவோம். அதற்கும் தயாராகி விட்டோம்.

ட்ரம்ப் மனநிலை பாதித்தவர் போல் செயல்படுகின்றார். இதனால் தான் எங்களை மிரட்டுவதற்காக ஒத்திகை போன்றவற்றில் ஈடுபடுகின்றார். நாங்கள் ஒருபோதும் அமெரிக்காவை விட மாட்டோம் என்று தெரிவித்துள்ளார்.

(க)



# ஐ.சி.சி டெஸ்ட் தரவரிசையில் ஆறாம் இடத்தில் இலங்கை

தமக்குச் சாதகமான மைதானத்தில் வைத்து இலங்கையுடனான டெஸ்ட் தொடரைப் பறிகொடுத்திருக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி ஐ.சி.சி இனால் வெளியிடப்பட்டிருக்கும் புதிய டெஸ்ட் தரவரிசையில் ஏழாம் இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ள அதேவேளை இலங்கை அணி ஆறாம் இடத்திற்கு முன்னேற்றம் கண்டுள்ளது.

இலங்கை அணி ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்று முடிந்திருக்கும் இந்த டெஸ்ட் தொடரை 2:0 என கைப்பற்றியதோடு மட்டுமல்லாமல் பாகிஸ்தானை அவர்களுக்குச் சாதகமான மண்ணில் வைத்து டெஸ்ட் தொடரொன்றில் வெள்ளையடித்த இரண்டாவது அணியாகவும் தம்மைப் பதிவு செய்து கொண்டுள்ளது.

இதற்கு முன்னர் பாகிஸ்தான், ஆஸ்திரேலியாவால் 2002 ஆம் ஆண்டில் நடைபெற்ற தொடரொன்றில் சொந்த மண்ணில் வைத்து வெள்ளையடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இத்தொடரின் முடிவானது இலங்கை அணிக்கு புதிய டெஸ்ட் தரவரிசையில் நான்கு புள்ளிகளைப் பெற்றுத்தந்துள்ளது. இதனால், தரவரிசையில் இலங்கை அணியின் மொத்தப் புள்ளிகள் 90 இலிருந்து 94 ஆக அதிகரித்துள்ளது. மறுமுனையில் பாகிஸ்தான் அணி ஐந்து புள்ளிகளைஇழந்துள்ளது. இதனால் அவர்களது மொத்தப் புள்ளிகள் 93 இலிருந்து 88 ஆகக் குறைந்துள்ளது.

தற்போது 94 புள்ளிகளுடன் தரவரிசையில் ஆறாம் இடத்திற்கு முன்னேறியிருக்கும் இலங்கை அணி தரவரிசையில் ஐந்தாம் இடத்தில் இருக்கும் ஆஸ்திரேலியாவை (97 புள்ளிகள்) விட வெறும் மூன்று புள்ளிகளே பின்தங்கி காணப்படுகின்றது.

அதேபோன்று தரவரிசையில் 8 ஆம் இடத்தில் காணப்படும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் (75 புள்ளிகள்) பாகிஸ்தானுக்கும் 13 புள்ளிகள் வித்தியாசமாக உள்ளன.

டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் இந்தியாவுடன் (125 புள்ளிகள்) நவம்பர் மாதம் 16ஆம் திகதி ஆரம்பமாகும் போட்டியில் இலங்கை அணி டெஸ்ட் தொடரொன்றில் அடுத்ததாக மோதுகின்றது. அதேவேளையில் பாகிஸ்தான் அடுத்த வருடத்தின் ஏப்ரல் மாதத்தில் அயர்லாந்துடன் டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது. அதனையடுத்து இங்கிலாந்துடனான டெஸ்ட் போட்டிகளிலும் பாகிஸ்தான் பங்கேற்கவுள்ளது.

இவை ஒரு புறமிருக்க பங்களா தேஷ் அணியுடனான டெஸ்ட் தொடரில் 2:0 என வெற்றி பெற்றிருக்கும் பாப் டு ப்ளேசிஸ் தலைமையிலான தென்னாபிரிக்க அணியும் ஐ.சி.சி. இன் புதிய தரவரிசைப் பட்டியலில் இரண்டு புள்ளிகளை பெற்று மொத்தமாக 111 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தில் காணப்படுகின்றது.

இதேவேளை, தென்னாபிரிக்காவுடன் தொடரை இழந்த பங்களாதேஷ் 72 புள்ளிகளுடன் தரவரிசையில் ஒன்பதாம் இடத்தில் காணப்படுகின்றது.



# இலங்கையை வீழ்த்தி தொடரை வெற்றியுடன் ஆரம்பித்தது மேற்கிந்தியத் தீவுகள் மகளிர் அணி

மேற்கிந்தியத் தீவுகள் மகளிர் அணிக்கு எதிராக இடம்பெற்ற முதலாவது ஒரு நாள் போட்டியில் இலங்கை மகளிர் அணி வெளிப்படுத்திய மோசமான துடுப்பாட்டம் காரணமாக 6 விக்கெட்டுக்களால் தோல்வியைத் தழுவியுள்ளது.

எதிர்வரும் 2021ஆம் ஆண்டு நியூசிலாந்தில் நடைபெறவுள்ள சர்வதேச மகளிர் உலகக் கிண்ணத்துக்கான தகுதிகாண் போட்டித் தொடர்கள் நேற்று முன்தினம் இடம்பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் மகளிர் மற்றும் இலங்கை மகளிர் அணிகளுக்கிடையிலான போட்டியுடன் ஆரம்பமானது.

மகளிர் உலகக் கிண்ணத்தை நடத்தும் நியூசிலாந்து அணி நேரடியாக உலகக் கிண்ண போட்டிகளுக்கு தகுதி பெறுவதுடன் முதல் 3 இடங்களைப் பெறும் அணிகளும் நேரடியாகத் தகுதி பெறும். ஏனைய அணிகள் தகுதிகாண் போட்டிகளின் மூலம் உள்வாங்கப்படும்.

இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் மகளிர் அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது போட்டி நேற்று முன்தினம் டொபாக்கோவிலுள்ள ப்ரையின் லாரா கிரிக்கெட் நிறுவன மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை மகளிர் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி களமிறங்கிய இலங்கை அணி, மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சிறப்பான பந்து வீச்சு மற்றும் களத்தடுப்புக் காரணமாக 49.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 136 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது.

இலங்கை அணி சார்பில் யசோதா மெண்டிஸ் 34 ஓட்டங்களையும் சமரி அத்தப்பத்து 25 ஓட்டங்களையும் டிலானி மனோதரா 28 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற, ஏனையோர் ஒற்றை இலக்கத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தனர். பந்து வீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஆபி ப்ளச்சர், ஹெய்லி மத்தியூஸ் மற்றும் ஸ்டாப்னி டெய்லர் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகள் வீதம் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 39 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கினை அடைந்தது. இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீராங்கனையாக களமிறங்கிய ஹெய்லி மத்தியூஸ் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த வேளை காயம் காரணமாக ஓய்வறை திரும்பினார். அதனைத் தொடர்ந்து இலங்கை அணியின் சிறப்பான களத்தடுப்பு மற்றும் பந்து வீச்சுக் காரணமாக மேற்கிந்தியத் தீவுகள் அணி அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்தது.

எனினும், சுதாகரித்துக்கொண்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி நடுவரிசை வீராங்கனைகளின் நிதானமான துடுப்பாட்டம் காரணமாக வெற்றி இலக்கை அடைந்தது. அவ்வணியின் செடீன் நேசன் 24 ஓட்டங்களையும் டீன்றா டொட்டின் 22 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்க மேரிசா எக்யுலேரியா மற்றும் கிசொனா நைட் ஆகியோர் ஆட்டமிழக்காது முறையே 32 மற்றும் 22 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் இலங்கை அணியின் தலைவி இனோகா ரணவீர 2 விக்கெட்டுக்களையும் சிரிபாலி வீரக்கொடி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ஒரு நாள் போட்டி நாளை மறுதினம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.









# மைலோ கிண்ண உதைபந்தாட்ட போட்டிகள் - 2017




நெஸ்லே லங்கா நிறுவனத்தின் மைலோ குழுமமும், யாழ்.மாவட்ட செயலகமும் இணைந்து யாழ்.மாவட்டத்திலுள்ள உதைபந்தாட்ட கழகங்களுக்கிடையில் வருடாந்தம் நடத்தும் மைலோ கிண்ண உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியின் இந்த வருடத்துக்கான சுற்றுப்போட்டி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

வழமையாக உதைபந்தாட்ட கழகங்களுக்கிடையில் மாத்திரம் நடைபெறும் இந்தச் சுற்றுப் போட்டி இம்முறை, பாடசாலை அணிகளுக்கிடையிலும் தனியாக நொக்கவுட் முறையில் இடம்பெறுகின்றன.

2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தொடர் இந்த வருடம் 4 ஆவது வருடமாக நடைபெறுகின்றது.

இதில் நேற்று முன்தினம் ஆறு அணிகள் மோதும் மூன்று போட்டிகள் இடம்பெற்றன.

முதலாவதாக இடம்பெற்ற போட்டியில் ஒலிம்பியா விளையாட்டுக் கழத்தை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் அணி மோதியது. தேநீர் இடைவேளை வரை போராடி யும் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெற முடியவில்லை.

இறுதி வரை கோல் எதனையும் பெறமுடியாத நிலையில் தண்ட உதை மூலம் வெற்றி தீர்மானிக்கப்பட்டது. இதில் ஆனைக்கோட்டை யூனியன் அணி 4:5 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில் கலைவாணி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வீனஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் கலைவாணி விளையாட்டுக்கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மூன்றாவது போட்டியொன்றில் திருக்குமரன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பொற்பதி விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் பொற்பதி விளையாட்டுக்கழ கம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(ப)

# சந்திமாலின் தலைமைத்துவம்; பாராட்டும் குமார் சங்கக்கார

இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான குமார் சங்கக்கார, பாகிஸ்தான் அணியுடனான டெஸ்ட் தொடரை 2:0 என கைப்பற்ற இலங்கை அணியை வழி நடத்திய தினேஷ் சந்திமாலுக்கு பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டு மத்திய கிழக்கு நாடான ஐக்கிய அரபு இராச்சியத்தை பாகிஸ்தான் தமது தாயகமாக தத்தெடுத்துக்கொண்ட பின்னர் டெஸ்ட் தொடரொன்றில் முதற்தடவையாக இலங்கை அணியினாலேயே தோற்கடிக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் பாகிஸ்தான் 2007 ஆம் ஆண்டிலிருந்து இந்தத் தொடர் வரை தமது சொந்த மண்ணில் நடைபெற்ற எந்தவொரு டெஸ்ட் தொடரிலும் தோல்வியடையாது காணப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டில் நடைபெற்ற டெஸ்ட் தொடரொன்றில் இலங்கை அணியை முதற்தடவையாக தலைமை தாங்கிய சந்திமால் அபுதாபியில் பாகிஸ்தானுடனான இந்த டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் வெற்றி பெறுவதற்கு 155 ஓட்டங்களை விளாசி பெரிய பங்களிப்பொன்றை வழங்கியிருந்தார். அத்தோடு இரண்டாவது போட்டியிலும் சந்திமால் அரைச்சதம் கடந்து சிறப்பாக செயற்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இது மிகவும் எதிர்பார்க்கப்பட்ட வெற்றியே. (இலங்கை) அணி மிகவும் ஒருங்கிணைந்து கடினமாக உழைத்திருந்தது. சந்திமால் சிறந்த தலைமைத்துவத்தையும் ரங்கன ஹேரத் மற்றும் தில்ருவான் பெரேரா ஆகியோர் சிறப்பான ஆட்டத்தையும் காட்டியிருந்தனர் என சங்கக்கார தெரிவித்துள்ளார். முதல் டெஸ்ட் போட்டியின் அழுத்தங்களை (எதனையும் கருத்திற்கொள்ளாது) சந்திமால் உள்வாங்கிய விதம் பார்ப்பதற்கு மிகவும் சிறப்பாக இருந்தது எனவும் தெரிவித்துள்ளார்.

போட்டியைப் பார்க்கும் மக்கள் சந்திமால் மிகவும் மெதுவாகச் செயற்பட்டார்



எனக் கூறுகின்றனர். இது டெஸ்ட் கிரிக்கெட். இப்படித் தான் டெஸ்ட் போட்டிகளில் விளையாட வேண்டும். அவர் இலங்கை அணியை ஒரு உறுதியான நிலைக்கு அழைத்துச் சென்றதன் காரணமாகவே எதிரணியை வீழ்த்த நேரம் போதுமாக அமைந்திருந்தது.

அவரது தலைமைத்துவம் மிகவும் சிறப்பானது. பாகிஸ்தான் வெற்றி இலக்கை அடைய துடுப்பாடிய வேளையில் களத்தடுப்பாளர்களை அவர் ஒருங்கமைத்த விதம் மிகவும் அருமையாக இருந்தது. துடுப்பாட்ட வீரராக அவர் எடுத்துக்கொண்ட பொறுப்பின் போது சந்திமால் பந்துகளை எதிர்கொண்ட விதமும் பார்ப்பதற்கு நேர்த்தியாக இருந்தது என்று சங்கக்கார தெரிவித்துள்ளார்.

## அநுராதபுரத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர் கேள்வி – பதிலாக இந்த விடயத்தை நேற்று வெளியிட்டார் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன்.

அக்கேள்வி – பதிலில் முதல்வர் வெளியிட்ட கருத்துக்களின் விவரம் வருமாறு:–

இரண்டு விடயங்கள் உண்டு. ஒன்று பொதுவானது. மற்றது பிரத்தியேகமானது. அதாவது தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் உடனே பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பது பொதுவான கோரிக்கை. அது பயங்கரவாதத் தடைச் சட்டத்துடன் தொடர்புடையது.

ஜெனீவாவில் பல வருடங்களுக்கு முன்னரே பயங்கரவாதத் தடைச்சட்டத்தை உடனே கைவாங்குவதாக ஐ.நாவுக்கு உறுதிமொழி கொடுத்த இலங்கை இன்னமும் அதைச் செய்யவில்லை. அதனைக் கைவாங்கி விட்டால், அதன் கீழ் குற்றவாளிகளாக காணப்பட்டவர்களை உடனே பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யுங்கள் என்று கோருவது இலகுவாய் இருந்திருக்கும். ஏனென்றால் எமது வழக்கமான சட்ட ஏற்பாடுகளுக்கு முரணான சரத்துக்களே குறித்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் இதுகாறும் இருந்து வந்துள்ளன. அவற்றின் அடிப்படையிலேயே பெரும்பான்மையான கைதிகள் இதுவரையில் குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ளனர். அதாவது எமது வழமையான சட்ட ஏற்பாடுகளுக்கு முரணானவிதத்திலேயே அவர்கள் குற்றவாளிகள் ஆக்கப்பட்டுள்ளார்கள்.

இங்குதான் நான் கூறிய பிரத்தியேகமான இரண்டாம் விடயம் வருகிறது. அதாவது, தற்பொழுது விளக்கத்திற்காக அநுராதபுரச்சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் கைதிகள் பிரச்சினை. முன்னையது பொது என்றால் இது குறிப்பிட்ட கைதிகளோடு தொடர்புடையது.

2009இல் இருவர் கைது செய்யப்பட்டு 2012 வரையில் நடவடிக்கை ஏதும் எடுக்காமல், தொடர்ந்து மறியலில் வைத்திருக்கப்பட்டார்கள். மூன்றாம் நபரை கைது செய்தபின் 2012இல் குற்றச்சாட்டுப் பத்திரம் கையளிக்கப்பட்டுள்ளது. ஐம்பது தடவைகளுக்கு மேல் வழக்கு தவணை கொடுக்கப்பட்டு, ஈற்றில் மூன்று நாட்களுக்கு தொடர் விளக்கம் வவுனியா மேல்நீதிமன்றத்தில் நியமிக்கப்பட்டு வழக்கு தொடங்க விருக்கும் நேரத்தில், அநுராதபுரத்திற்கு மாற்றுமாறு சட்டத் துறைதலைமை அதிபதி ஆணை வழங்கியுள்ளார்கள். இது ஒரு பொறுப்பற்ற செயலாகத் தென்படுகிறது. உண்மையில் வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி வேண்டா வெறுப்பாகத்தான், உத்தியோக பூர்வ கட்டாயத்தின் நிமித்தம் வழக்கை அநுராதபுரத்திற்கு மாற்றினார். காரணங்கள் கூறப்படாவிட்டாலும் சாட்சிகள் பயமுறுத்தப்பட்டமையாலேயே இவ்வாறு மாற்றியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சட்டப்படி, சாட்சிகளுக்காக வழக்கை இன்னொரு நீதிமன்றத்திற்கு மாற்றுவது கண்டனத்திற்குரியது. சாட்சிகளைப் பொலிஸாரே மன்றுக்குக் கொண்டுவந்து திரும்பவும் கொண்டுபோய் அவர்கள் வதிவிடங்களில் சேர்ப்பிக்க முடியும். ஒன்றரை லட்சம் படையினர் வடமாகாணத்தில் குடிகொண்டிருக்கும் போது சாட்சிகள் பயந்து, வரத்தயங்குகின்றார்கள் என்பது எனக்கு ஒரு நொண்டிச்சாட்டாகவே தென்படுகிறது.

மருத்துவமனையில் இருந்து கொண்டே இது பற்றி ஆராய்ந்தேன். எனக்குக் கிடைத்த தகவல்களின் படி போர் முடிவடையும் தறுவாயில் முன்னரே கைது செய்து வைத்திருக்கப்பட்ட சிலரை விடுதலைப்புலிகள் கொன்றார்கள் என்றும், அதனுடன் இந்தக் குறிப்பிட்ட கைதிகள் தொடர்புபட்டிருந்தார்கள் என்பதே அவர்கள் மீதான குற்றச்சாட்டுகளுக்கு அடிப்படை என்றும் தெரியவந்துள்ளது.

அத்துடன் கைதில் இருக்கும் வேறு சில கைதிகள் அரச சாட்சிகளாக மாறி குறித்த மூன்று கைதிகளுக்கு எதிராகச் சாட்சியம் கூறினால் விடுதலை கிடைக்கும் என்று அவர்களுக்குக் கூறப்பட்டதாகவும் தெரிகின்றது.

அப்படியெனில், அரச சாட்சிகளாக மாறிய இந்த மூன்று தமிழ்ச் சாட்சிகள் பற்றியே அரசுக்குக் கரிசனை போலத் தெரிகிறது. இங்கு அரசியல் கலந்திருப்பதை நான் காண்கின்றேன். நடந்ததோ இல்லையோ, எப்படியாவது விடுதலைப்புலிகள் கடைசிக் கட்டத்தில் தம் வசம் இருந்த சிறைக் கைதிகளைச் சுட்டுக்கொன்றார்கள் என்பது நீதிமன்றத்தில் நிரூபணமாகிவிட்டால் படையினர் செய்த அட்டூழியங்களுக்குச் சமனாகப் புலிகளும் யுத்த குற்றங்களில் ஈடுபட்டிருந்தனர் என்று சர்வதேச அரங்குகளில் இலங்கை அரசாங்கம் கூறமுடியும். இதனால் தான் வேறு கைதிகளையே அரச சாட்சிகளாக்கி தமக்கு வேண்டிய ஒரு முடிவை குறித்த வழக்கில் கொண்டுவர அரசு பிரயத்தனத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகின்றது. இவை என்னுடைய ஊகமே ஒழிய முழுமையான தரவுகள் எனக்கு இன்னமும் தரப்படவில்லை.

சாட்சிகள் வவுனியா வரப் பயப்படுகின்றார்கள் என்றால், யார், யார் என்ன மாதிரியான பயமுறுத்தல் காரணமாக அங்குவரப் பயப்படுகின்றார்கள் என்று சட்டத் துறை தலைமையதிபதிக்கு சத்தியக் கடதாசிகள் கையளித்துள்ளார்களா என்பதை அவர் வெளிப்படுத்த வேண்டும்.

இந்தத் தமிழ் அரச சாட்சிகள் தமிழ்ப் பிரதேச நீதிமன்றத்தில் தமிழ் நீதிபதி முன்னிலையில் சுதந்திரமாக சாட்சியமளிக்க முடியும். அவ்வாறு சாட்சியமளிக்கும் போது தம்மிடம் இருந்து எவ்வாறு சாட்சியங்களுக்கான விவரங்களை அரச தரப்பு பெற்றுக் கொண்டது என்பதை அவர்கள் வெளிப்படுத்திவிடுவார்களோ என்ற பயமே, வழக்கை அநுராதபுரத்திற்கு மாற்றியமைக்கான காரணம் என நான் யூகிக்கின்றேன். உண்மை வெளிவந்தால் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி வழக்கைத் தூக்கி எறியத் தயங்கமாட்டார் என்பது சட்டத்துறைத் தலைமை அதிபதிக்குத் தெரியும்.

மேலும் குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்கள் வழமையான சட்டத்திற்குப் புறம்பாக, தருணத்திற்கு ஏற்றவாறு கொண்டுவரப்பட்ட மிகக் கேவலமான சாட்சியம் என்றே உயர் நீதிமன்ற நீதியரசர் விக்னேஸ்வரன் உள்ளடங்கலாக நீதிபதிகள் பலர் கணித்துவந்துள்ளனர். நாகமணி வழக்கில் நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்கள் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை மட்டுமே சாட்சியமாக வைத்து ஒருவரைக் குற்றவாளியாக்குவது மிகவும் ஆபத்தானது என்று குறிப்பிட்டுள்ளார். ஆகவே குறித்த ஒப்புதல் வாக்குமூலங்களில் நடந்ததாகக் கூறப்படும் முக்கிய விடயங்கள் சம்பந்தமாக அனுசரணைச்சாட்சியமும் பெறப்படவேண்டும் என்று கூறியிருந்தார். இவற்றை சில நீதிமன்றங்கள் ஏற்றுக் கொண்டுள்ளன. பல ஏற்றுக்கொள்ளவில்லை. மேற்படி தமிழ் – அரச, சாட்சிகளின் சாட்சியம் முரணாக இருந்தால் கூட வெறுமனே குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்களை வைத்து கைதிகளைக் குற்றவாளிகள் ஆக்கிவிடலாம் என்றே அரசு கருதுகின்றது. இதனால் தான், வெறும் குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்களை மட்டும் வைத்து குற்றவாளிகளாக்கிக் கொண்டிருக்கும் நீதிமன்றங்களுக்கு மாற்றுவதை உசிதமென அரசாங்கமும் அதன் சட்டத்துறைத் தலைமையதிபதியும் எண்ணுகின்றார்கள் போன்று தெரிகின்றது.

எது எவ்வாறு இருப்பினும் இவ்வாறான மாறுதல் கைதிகளின் மனித, சட்ட உரிமைகளைப் பாதிக்கின்றன. சட்டத்துறைத் தலைமையதிபதி புறநிலை (objective) வைத்தே இவ்வாறான வழக்குகளை நோக்க வேண்டுமே அன்றி, அக நிலையில் இருந்து (subjective) நோக்குவது கண்டிக்கத்தக்கது. – என்றார். (உ)

## சுமந்திரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமரவீரவுடன் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன் இந்தியா பயணிக்கின்றார்.

அதனால் நாளை யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்குபற்றும் நிகழ்வுகளில் சுமந்திரன் கலந்துகொள்ளமாட்டார் என்று கூறப்பட்டது.

மீனவர் பிரச்சினை தொடர்பாக இலங்கை – இந்தியா அதிகாரிகள் மட்டப் பேச்சு இன்று நடைபெறுகின்றது. (உ)

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல பொது அமைப்புகளும், கட்சிகளும் தொழிற்சங்கங்களும், சமூக நிறுவனங்களும் ஒன்று பட்டு – ஏகோபித்த – ஆதரவை இந்தக் கடையடைப்புக்கு வழங்க முன்வந்திருக்கின்றமையால் கடையடைப்பும், இன்று காலை 9.30 மணிக்கு வடமாகாண ஆளுநரின் யாழ்ப்பாணத்தில் உள்ள செயலகத்தின் முன்னாள் இடம்பெறும் கவனவீர்ப்பும் வெற்றிகரமாக இடம்பெறும் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் முழுநம்பிக்கை வெளியிட்டுள்ளன. (உ)

## நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வாரம் முழுவதும் மட்டக்களப்பு, திருகோணமலையில் பல்வேறு நிகழ்வுகளில் தாம் பங்குபற்றுவதால் அடுத்த வார இறுதியில் தம்மால் யாழ். செல்ல முடியாது என அவர் தெரிவித்திருந்தார்.

சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி பங்குபற்றும் நிகழ்வுகள் தொடர்பான அழைப்பிதழில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனின் பெயர் உள்ளமையால் அது குறித்து கொழும்பில் உள்ள அவருடன் நேற்றிரவும் தொடர்பு கொண்டு கேட்டோம்.

"நான்தான் ஏற்கனவே இந்த நிகழ்வுகளில் பங்குபற்றமாட்டேன் என்பதை உங்களுக்குக் கூறியிருந்தேனே....! எனக்கும் அழைப்பிதழ் வந்தது. பார்த்தேன். ஆனால் அந்நிகழ்வுகளுக்காக யாழ். செல்லும் திட்டம் ஏதும் என்னிடம் இல்லை." – என்று மீளவும் உறுதிப்படுத்தினார் சம்பந்தன். (உ)

## மைத்திரி,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட – ஏற்பாட்டுக் குழு நேற்றிரவு அறிவித்தது.

நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் ஒன்றுகூடி நிலைமைகளை ஆராய்ந்த பின்னர்தான் விடுத்த அறிக்கையில், அந்தக் குழு இவ்வாறு தெரிவித்திருக்கின்றது.

அறிக்கையின் முழு விவரம் வருமாறு:–

வவுனியா மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வந்த தங்களுடைய வழக்குகள் அநுராதபுரம் மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டமையை எதிர்த்து, அந்த வழக்குகள் மீண்டும் வவுனியா மேல்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட வேண்டும் என்னும் கோரிக்கையை முன்வைத்து, தமிழ் அரசியல் கைதிகள் மூவர் கடந்த 18 நாள்களாக உணவுத் தவிர்ப்புப் போராட்டமொன்றை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக ஒரு தீர்க்கமான முடிவெடுக்கும் அதிகாரமுடைய ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்த போதிலும் கூட, இது வரை எந்தவொரு காத்திரமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அதேவேளை இது தொடர்பில் ஜனாதிபதியின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டிய பொறுப்பிலிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் இதுவரை எந்தவொரு காத்திரமான நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கின்றமையுடன், அரசாங்கத்தை உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் காப்பாற்றியும் வருகின்றார்.

இவ்வாறானதொரு சூழலில், தமிழ் அரசியல் கைதிகள் மூவரினதும் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு ஜனாதிபதியின் மீதும் எதிர்கட்சித் தலைவர் மீதும் அழுத்தத்தைப் பிரயோகிக்கும் முகமாக வெள்ளிக்கிழமை அன்று, வடக்கு மாகாணம் தழுவிய வகையில் கடையடைப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கின்றோம்.

அரசியல் கைதிகள் தங்களின் உயிர்களைப் பணயம் வைத்துப் போராடி வருகின்ற நிலையில், அவர்களது நியாயமான கோரிக்கைகளைப் பொருட்படுத்தாது, 14.10.2017 சனிக்கிழமை அன்று, ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவரும் பல்வேறு நிகழ்வுகளில் பங்குகொள்வதற்காக யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளனர். இது தமிழ் மக்களுக்கு எந்த வகையிலும் ஏற்புடையது அல்ல என்பதுடன், வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதுமாகும்.

உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டு வரும் அரசியல் கைதிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றாது ஜனாதிபதியோ, எதிர்க்கட்சித் தலைவரோ வெறுமனே நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக வருகை தருவார்களாக இருந்தால், அவர்களுக்கு எதிராகக் காத்திரமான எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய நிலைக்குத் தமிழ் மக்கள் நிர்ப்பந்திக்கப்படுவார்கள்.

இவ்வாறானதொரு சூழலில், அரசியல் கைதிகளின் கோரிக்கைகளைப் புறக்கணித்து ஜனாதிபதியும் சம்பந்தனும் சனிக்கிழமை அன்று, யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் நிகழ்வுகளில் கலந்து கொள்வார்களாயின், அந்த நிகழ்வுகளைப் புறக்கணிக்குமாறு வடக்கு மாகாண முதலமைச்சர், மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரைத் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றோம். – என்று உள்ளது. (உ)

## கிளர்ச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(i) பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கைதிகள், தண்டனை விதிக்கப்பட்டவர்களாகவோ, குற்றஞ்சாட்டப்பட்டவர்களாகவோ அல்லது இன்னமும் குற்றச்சாட்டுக்கள் வழங்கப்படாதவர்களாகவோ இருந்தாலும் அவர்கள் அனைவரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழேயே கைது செய்யப்பட்டார்கள் என்பதுடன், அவர்களுக்கு எதிரான சகல நடவடிக்கைகளும் அச்சட்டத்தின் கீழேயே மேற்கொள்ளப்பட்டன.

(ii) இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் கொடூரமான, வெறுக்கத்தக்க ஒரு சட்டம் என்பதும் அது காலத்துக்குப் பொருத்தமற்றது என்பதும் இலங்கை அரசினால் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக உள்நாட்டு மற்றும் சர்வதேச நியமங்களுக்கு ஏற்புடைய வகையில் புதிய சட்டமொன்றை உருவாக்கப் போவதாக உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் அரசாங்கம் உறுதி வழங்கியிருந்தது.

(iii) இந்த உறுதியளிக்கப்பட்ட கடப்பாட்டை இலங்கை அரசு

பக்கம் 03 »

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கிவிட்டு வாருங்கள்.

"அப்படி இல்லாமல் நீங்கள் வருகின்றபோது எம்மால் உங்களை வரவேற்க முடியாது. அந்த நிகழ்வில் எம்மால் பங்குபற்ற இயலாது என்பதை மன வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்."

–இவ்வாறு குறிப்பிடும் கடிதம் ஒன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நேற்றிரவு அனுப்பி வைத்திருக்கின்றார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்.

இவ்விடயம் தொடர்பாக அவர் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தின் சாராம்சம் வருமாறு:–

நீண்ட காலமாக – நீதி, நியாயமற்ற வகையில் – எமது உறவுகள் சிறையில் அல்லற்படுகின்றார்கள்.

அநுராதபுரத்தில் வாடும் இந்த மூன்று கைதிகளும் தங்களிடம் கோருவது இரண்டு விடயங்களைத் தான்.

ஒன்று – தங்களுக்கு எதிரான வழக்குகள் நியாயமற்ற வகையில், வேண்டுமென்ற உள்நோக்கத்துடன், அநுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றப்படுகின்றமையைத் தடுத்து நிறுத்துங்கள்.

இரண்டு – நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள தங்களை விரைந்து விடுதலை செய்ய நடவடிக்கை எடுங்கள்.

இந்த இரண்டு கோரிக்கைகளையும் சாதகமாகப் பரிசீலித்து, அவர்களுக்கு நியாயம் வழங்கும் ஒரு முடிவை நீங்கள் எடுக்க வேண்டும்.

இந்த விவகாரம் தமிழ் மக்களின் உணர்வலைகளைத் தட்டி எழுப்பும் விடயமாக மாறியுள்ள சூழ்நிலையில், அதற்குச் சரியான தீர்வை – நல்ல முடிவை – அறிவிப்பதன் மூலம் உங்களினதும், உங்கள் அரசினதும் பெயரையும் செல்வாக்கையும் அதன் மீதான தமிழ் மக்களின் அபிமானத்தையும் நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

அப்படி இல்லாமல் நீங்கள் யாழ். வருகை தந்தால் உங்களை எம்மால் வரவேற்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். – என்று உள்ளது. (உ)

# வழிகாட்டல் குழுவில் வாயே திறக்காத மனோ வெளியே வந்து சமஷ்டி, இணைப்பு என்கிறார்

## சுமந்திரன் சாட்டை



கொழும்பு,ஒக்.13

வடக்கு - கிழக்கு இணைப்பு, சமஷ்டி மற்றும் மத சார்பற்ற நாடு என்ற விடயங்களை அமைச்சர் மனோ கணேசன் ஆதரிக்கின்றார் என்பதை இப்போதாவது அறிந்து கொள்ள முடிந்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

''வடக்கு - கிழக்கு இணைப்பு, சமஷ்டி மற்றும் மத சார்பற்ற நாடு என்பதே எனது தனிப்பட்ட நிலைப்பாடு. ஆனால், நாட்டில் அதற்கான சாத்தியப் பாடுகள் இல்லை. இதனை கொண்டு வருவதற்கான சாத்தியப்பாடுகள் வழிநடத்தல் குழுவிலும் இல்லை. அதனை கொண்டு வருவதற்கான சாத்தியம் அரசாங்கத்துக்குள்ளும், நாட்டுக்குள்ளும் கிடையாது. அந்த உண்மையை வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ்மக்களுக்குச்சொல்ல வேண்டும் என்பதில் உண்மையாக இருக்கின்றேன் என அமைச்சர் மனோ கணேசன் இப்போதுகூறியிருக்கின்றார் எனச் சுட்டிக்காட்டினார் சுமந்திரன்.

இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கருத்து வெளியிடுகையில் -

வடக்கு - கிழக்கு இணைப்பு, சமஷ்டி மற்றும் மதம் சார்பற்ற நாடு என்ற விடயத்தை அமைச்சர் மனோ கணேசன் ஆதரிக்கின்றார் என்ற விடயத்தை இன்றே என்னால் தெரிந்து கொள்ள முடிந்தது. ஏனென்றால் 74 தடவைகள் அரசமைப்பு வழிநடத்தல் குழு சந்தித்துப் பேசியிருக்கின்றது. ஆனால், அவரின் இந்த நிலைப்பாடுகளின் ஒரு விடயம் தொடர்பிலும் அவர் வாய் திறந்து பேசியமை கிடையாது.



அந்தக் கூட்டங்கள் அனைத்தும் ஒளிப்பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை அனைத்தும் உரிய நேரத்தில் பகிரங்கப்படுத்தப்படும் என்பது ஏற்கனவே அந்த கூட்டங்களை நடத்துகின்றமை தொடர்பான தீர்மானத்திலேயே சொல்லப்பட்டுள்ளன. ஆகவே உரிய காலத்தில் அக்கூட்டங்கள் பற்றிய முழு உண்மைகளும் மக்களுக்குத் தெரியவரும். இவற்றுக்காகப் பேசியவர்கள் யார்? பேசாமல் வாயை மூடிக் கொண்டிருந்தவர்கள் யார்? என்ற விடயம் மக்களுக்குத் தெரியவரும்.

அரசமைப்பு வழிநடத்தல் குழுவில் அமைச்சர்களான சுவாமிநாதன், மனோகணேசன், நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா, எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் நான் ஆகிய ஐந்து தமிழர்கள் இடம்பெற்றுள்ளோம். அமைச்சர் மனோகணேசன் சில விடயங்கள் குறித்து அங்கு பேசியிருக்கின்றார். அமைச்சர் சுவாமிநாதன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் அங்கு ஒரு நாளேனும் வாய் திறந்து பேசியமை கிடையாது.

ஆனால், புதிய அரசமைப்பில்வடக்கு-கிழக்கு இணைப்பு உள்ளிட்ட அடிப்படை விடயங்கள் குறித்து இரா.சம்பந்தன் மற்றும் நான் மட்டுமே பேசியிருந்தோம். இந்த வரைவை உருவாக்குவதில் காரசாரமான கருத்துகளை நாங்கள் இருவர் மட்டுமேமுன்வைத்திருந்தோம். ஏனைய மூவரும் பேசியமை கிடையாது. மத சார்பற்ற நாடு என்ற விடயம் குறித்தும் நான் மட்டுமே அதிகமாக பேசியிருந்தேன். இந்நிலையில், அங்கு தெளிவான ஒரு நிலைப்பாட்டை எடுக்காத ஒருவர் இவ்வாறான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என எம்.ஏ.சுமந்திரன் மேலும்தெரிவித்துள்ளார்.

(உ)

---

## கண்டி தொழிற்சாலையில் பணியாற்றிய 200 பேர் திடீரென வைத்தியசாலையில்!





கொழும்பு, ஒக். 13

கண்டி ஹாரகம ஆடை தொழிற்சாலையில் பணியாற்றும் 200 ஊழியர்கள் திடீரென நேற்று காலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உணவு ஒவ்வாமை காரணமாக ஊழியர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொழிற்சாலையில் காலை உணவு வழங்கப்பட்ட நிலையில், அதனைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு இவ்வாறு ஒவ்வாமை நிலைமை ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்படுகின்றது.

---

## பூரண கதவடைப்புப் போராட்டத்தில் பங்கேற்று கைதிகளின் விடுதலைக்குப் பலம் சேருங்கள்!

### வடமாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் அழைப்பு



கொழும்பு, ஒக். 13

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வடமாகாணம் தழுவிய ரீதியில் இன்று நடைபெறும் பூரண கதவடைப்புப் போராட்டத்தில் பங்கேற்று அரசியல் கைதிகளின் விடுதலைக்குப் பலம் சேர்க்கமுன்வருமாறு வடமாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

தமது வழக்குகளை மீண்டும் தமிழ் பிரதேச நீதிமன்றங்களுக்கு மாற்ற வேண்டும் என்ற உடனடிக் கோரிக்கையையும், அவ்வாறு மாற்றப்பட்ட பின்பு தமது வழக்குகளைத் துரிதமாக விசாரித்து முடிவுகாணவேண்டுமென வலியுறுத்தியும் அநுராதபுரம் சிறைச்சாலையில் சாகும் வரை உணவுதவிர்ப்புப் போராட்டத்தில் கைதிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த மூவரின் கோரிக்கைகளை இழுத்தடிக்காது உடனடியாக நிறைவேற்றுமாறும், அனைத்துத் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறுவலியுறுத்தியும்இலங்கை அரசுக்குஅழுத்தம்கொடுக்கும் வகையில்தமிழ் பொது அமைப்புகளால் அறிவிக்கப் பட்டுள்ள வட மாகாணம் தழுவிய பூரண கதஷ்ய உணர்த்தி நிற்கின்றது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் துணையோடு கைது செய்யப்பட்டு அதிகார அத்துமீறலின் கீழான அச்சுறுத்தலாகும்.

இந்தநிலையில் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களை மட்டுமே அடிப்படை ஆதாரமாகக்கொண்டு நீதிக்குப் புறம்பாகசிறையில் அடைக்கப்பட்டிருக்கும்தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்காது பொய் வாக்குறுதிகளை வழங்கி இலங்கை அரசு காலம் கடத்துகிறது.


இலங்கை அரசின் இந்தத் தந்திரத்தனமான போக்கை எமது ஒன்றுபட்ட பலத்தின் மூலம் முறியடிக்கத் தாயக மக்கள் அனைவரும் இந்தக் கடையடைப்புப்போராட்டத்தில் பங்கேற்கின்றமை காலத்தின் கட்டாயமாகும்.


அநீதியான முறையில் சிறைவாசம் அனுபவித்து வரும் 132 தமிழ் உறவுகளுக்காக நாங்கள் உறுதுணையாக இருக்கின்றோம். அவர்களுக்கு நிரந்தர விடுதலை கிடைக்கும் வரை நாம் ஓயமாட்டோம் என்பதையும் இலங்கை அரசு உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு இடித்துரைக்கும் விதமாகவும் நாம் இந்தக் கடையடைப்புப் போராட்டத்தில் பங்கேற்போம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir



# லண்டனில் நடைபெற்றது தமிழீழப் பெண்கள் எழுச்சி!









வவுனியா, ஒக். 13

பிரித்தானியத் தலைநகர் லண்டனில் தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வும், முதல் பெண் மாவீரரான 2 ஆம் லெப். மாலதியின் 30 ஆம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வும் சிறப்பாக நடைபெற்றுள்ளன.

இந் நிகழ்வு வசந்தகுமாரி சந்திரபாலன் தலைமையில் கடந்த செவ்வாய்க் கிழமைவடமேற்குலண்டன் பகுதியில் அமைந்துள்ள Maharastra Maddal மண்டபத்தில் நடை பெற்றது.

பெருந்திரளான தமிழ் மக்கள் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில், மாவீரர்களான லெப்.வெங்கடேஷ், லெ.கேணல் பாமா ஆகியோரின் தாயார் திருமதி இரத்தினேஸ்வரி சண்முகசுந்தரம், தேச விடுதலைச் செயற்பாட்டாளர் திருமதி தவமணி வன்னியசிங்கம், முன்னாள் போராளி திருமதி. நிலா, மாவீரர் போராளிகள் குடுமப நலன் பேணும் அமைச்சின் அமெரிக்க பொறுப்பாளரின் மனைவி திருமதி ரஜனி ராமலிங்கம் மற்றும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் சிறுவர், பெண்கள், முதியோர் விவகார அமைச்சர் திருமதி பாலம்பிகை முருகதாஸ் ஆகியோர் பொதுச் சுடரினை ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியினை மாலதி படையணித் தளபதிகளுள் ஒருவரான திருமதி. மதுரா ஏற்றிவைத்தார். முதல் பெண் மாவீரரான 2ஆம் லெப். மாலதியின் திருவுருவப் படத்திற்கு ஈகைச்சுடரினை 2ஆம் லெப். மாலதியுடன் ஒன்றாக சமகாலத்தில் பயிற்சிப்பாசறையில் பயிற்சி பெற்றுத் தாயகம் சென்று கள முனைகள் கண்ட முன்னாள் போராளி திருமதி பவானி ஏற்றி வைக்க மலர் மாலையினை போராளி ஜெயமாலினி லிங்கேஸ்வரன் அணிவித்தார்.

இதுவரை காலமும் தாயக விடுதலைப் போரில் வீரச்சாவைத் தழுவிய மாவீரர்களுக்காகவும், அந்நிய, இலங்கைப் படைகளினால் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்குமாக அகவணக்கம் செலுத்தப்பட்டு மக்களின் மலர் வணக்கத்தோடு நிகழ்வுகள் இடம் பெற்றன.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் மாவீரர், போராளிகள் குடும்பநலன் பேணும் அமைச்சின் பிரித்தானியாவிற்கான பொறுப்பாளர் நிமலன் சீவரட்ணம் ஏற்பாட்டில் நடைபெற்ற இந் நிகழ்வு மண்டபம் நிறைந்த மக்களோடு மிகவும் எழுச்சி பூர்வமாக சிறப்பாக நடைபெற்று உறுதியேற்பு மற்றும் தேசியக் கொடி இறக்கலுடன் நிறைவடைந்தது.




# தமிழர் ஆசிரியர் சங்கமும் ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவு

இன்று இடம்பெறவுள்ள வடக்கு மாகாணம் தழுவிய ஹர்த்தாலுக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தனது பூரண ஆதரவைத் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளவை வருமாறு:-

முன்னைய ஆட்சியிலும், தற்போதைய நல்லாட்சியிலும் தொடருகின்ற தமிழர்களின் சிறை வாழ்க்கை முடிவுக்கு வர வேண்டும். ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் கூறிய வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. ஆயிரக்கணக்கான குழந்தைகளும் பெண்களும் தந்தையில்லாமல், தாய் இல்லாமல், சகோதரர்கள் இல்லாமல், கணவன்மார்கள் இல்லாமல், குழந்தைகள் இல்லாமல் நாள்தோறும் பரிதவித்து நிற்கின்றனர். இத்தகைய நிலை தொடர்கதையாகவே செல்கின்றது. இதனால் நாளுக்கு நாள் தற்கொலைகளும் அதிகரித்துச் செல்கின்றன. இவை எல்லாம் ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

போராடித்தான் இவற்றைப் பெறவேண்டும் என்ற நிலைக்கு தமிழர்கள் தொடர்ந்தும் தள்ளப்படுகின்றனர். எமது இனத்தின் மென்போக்கையும், விட்டுக் கொடுப்புக்களையும் அரசாங்கமும், அதில் அதிகாரம் மிக்கவர் களும் இனிமேலும் புறந்தள்ள முடியாது. சர்வதேசம் சுட்டிக்காட்டியும் தமிழர்களையும், தமிழினத் தலைவர்களையும் பேரின அரசு தொடர்ந்தும் ஏமாற்றிவருகின்றது.

எனவே இவ்விவகாரத்தில் மக்களின் ஒட்டுமொத்த எழுச்சியை வெளிப்படுத்த இன்று நடைபெறும் பூரண ஹர்த்தாலுக்கு அனைவரும் ஒத்துழைத்து தமது ஆதரவை வழங்க வேண்டுமென்று இலங்கைத் தமழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுக்கின்றது. - என்று உள்ளது.

# ரயில்வே வேலைநிறுத்தம் நேற்று மாலையில் முடிவு

ரயில் சாரதிகள் மற்றும் காப்பாளர்களினால் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் செயலாளருடன் நடைபெற்ற சந்திப்பை அடுத்து கைவிடப்பட்டது. மேற்படி தொழிற்சங்க நட வடிக்கைகளில் ஈடுபட்ட ரயில்வே ஊழியர்களின் பிரதிநிதிகளுக்கும் போக்குவரத்து அமைச்சின் அதிகாரிகளுக்கும் இடையில் நேற்றுக் காலையில் நடைபெற்ற பேச்சுகள் தோல்வியில் முடிவடைந்தன.

அந்த நிலையில் ரயில்வே சேவையை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தும் திட்டம் ஒன்று அரச உயர்மட்டத்தில் யோசிக்கப்பட்டது. அப்போதே ஜனாதிபதியுடனான சந்திப்புக்கு ரயில்வே தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்திருந்தன. அதனையடுத்தே ஜனாதிபதியின் செயலாளருடன் சந்திப்பு இடம்பெற்றது.

*(முன்னர் வந்த செய்தி 4 ஆம் பக்கத்தில்)*



68ஆவது இராணுவ தினத்தை ஒட்டி கடந்த செவ்வாயன்று 23ஆவது 'கெமுனு வோச்' பிரிவின் ஏற்பாட்டில் 522 பிரிகேட்டில் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது. 55 ஆவது டிவிஷன் தளபதி பிரிகேடியர் ஜயந்த குணரட்ண, 552 பிரிக்கேட் தளபதி பிரிகேடியர் அதீப திலகரத்ன, 23 கெமுனு வோச் பிரிவின் தளபதி கபில திக்கும்புர ஆகியோரும் பங்குபற்றினர். வைத்தியர் டி.கலைச்செல்வமும், வைத்தியசாலை அலுவலர்களும் இந்த இரத்ததான ஒழுங்குகளைக் கவனித்தனர்.

# சாவகச்சேரியில் வாள்வெட்டு

சாவகச்சேரி, ஒக்.13

யாழ். சாவகச்சேரி, நுணாவில் பகுதியில் 'ஏ9' வீதியின் 190ஆம் கட்டைப் பகுதியில் உள்ள ஓட்டுத் தொழிலகம் ஒன்றுக்குள் நேற்று முற்பகல் 11 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்து புகுந்த இருவர், அங்கிருந்த கடை உரிமையாளரைத் துரத்தித் துரத்தி வாளால் வெட்டினர். கடையில் தொழில் புரிந்த இளைஞன் ஒருவன் மீதும் அவர்கள் தாக்குதல் நடத்தினர்.

தாக்குதல் நடத்தியோர் அந்த மோட்டார் சைக்கிளிலேயே தப்பிச் சென்றனர்.

காயமடைந்த கடை உரிமையாளர் சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு விரையப்பட்டார்.

சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.10.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.